# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, ஆவணி 11௳ (27-8-72) ஞாயிறு 1391 றஜப்ஆகிர் 17 புத்தகம் 25 இதழ் 39


## விஞ்ஞான கணித ஆசிரியர் நியமனத்தில் பாரபட்சமா?

தமிழ் பாடசாலைகளுக்கு விஞ்ஞான, கணித ஆசிரியர்களை தெரிவுசெய்வதில் கல்வியமைச்சு பாரபட்சமாக நடந்து வருகிறதா?— இவ்வாறு ஆத்திரத்துடன் கேட்கிறார்கள் தமிழ் இளைஞர்கள்.

கடந்த (ஜூலை) மாதம் 22-ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக, தமிழ்மொழி மூலம் விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கக் கூடியவர்களை விண்ணப்பிக்கும் படியும், அகில இலங்கையிலும் 210 வெற்றிடங்கள் இருப்பதாகவும் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. திட்டமிட்டாற்போல் தமிழ் மொழிமூலம் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி விளம்பரத்தில் இஸ்லாமிய பாடசாலைகளுக்குத்தான் இவ்வாசிரியர்கள் தேவை என்பது பற்றிக் குறிப்பிடவேயில்லை.

ஆனால், ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பிரசுரிக்கப்பட்ட அதே வர்த்தமானி விளம்பரத்தில் இஸ்லாமிய பாடசாலைகளில் கற்பிப்பதற்காகவே அவ்விண்ணப்பங்கள் கோரப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தத்தம் வட்டாரக் கல்வியதிபதியூடாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

ஆனால் கடைசியாகக் கிடைத்த ஒரு செய்தியின் படி, இஸ்லாமிய விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை மட்டுமே அவரவர் குறிப்பிட்டுள்ள வட்டாரங்களுக்கு அனுப்பி வைக்கும்படி அமைச்சர் அந்தரங்கமாக ஒரு சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளதாக அறியப்படுகிறது.

இந்நிலையில் இதற்கு விண்ணப்பித்த இஸ்லாமியரல்லாத ஏனைய தமிழர்களின் நிலையென்ன? ஏன் இந்தப் பாரபட்சம் என்று கேட்கிறார்கள் தமிழ்இளைஞர்கள்.

# ஐ. நா. சபைக்கு தமிழர் பிரச்சினை!

## இந்திய, தமிழக அரசுகளிடம் 'தமிழர் இயக்கம்' கோரிக்கை!

ஈழத்தமிழர் பிரச்சினையை இந்திய அரசு ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்றும், அந்த வழியில் இந்திய அரசை சிந்திக்க வைத்திடும் தீர்மானத்தை தமிழ் நாடு சட்டமன்றம் ஒரு மனதாக நிறைவேற்ற வேண்டும் என்றும் திருச்சியில் அண்மையில் நடைபெற்ற 'தமிழர் இயக்கத்தின்' பொதுக்குழு கோரியுள்ளது.

திருச்சியில் நடைபெற்ற தமிழர் இயக்கப்பொதுக்குழு ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாகத் திட்டியுள்ள தீர்மானம் பின்வருமாறு:-

''கடந்த மே மாதம் 22ம் திகதி இலங்கைக்கு 'சிறீ லங்கா' என்ற புதியபெயர் அறிவிக்கப்பட்டு, சிங்களம் ஒன்றையே ஆட்சிமொழியாகவும் புத்தமதம் ஒன்றையே அரசாங்க மதமாகவும் கொண்ட புதிய அரசியலமைப்புச் சட்டம் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.

ஆனால் தமிழ்மொழிக்கும் அரசாங்கத்தில் இடம் வேண்டும்; தமிழ் மக்கள் வாழும் பகுதிகளை தனி மாநிலமாகக் கொண்ட சமஷ்டி அமைப்பு இலங்கைக்கு வேண்டும் என்ற தமிழர்களின் குறைந்தபட்ச கோரிக்கைகள் கூட மறுக்கப்பட்டுள்ளன. அதை எதிர்த்து இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்கள் ஓரணியில் நின்று போராடி வருகிறார்கள். அவர்களுடைய போராட்டத்தை வெளியுலகிற்குத் தெரியாமல் இலங்கையின் சிங்கள அரசு மறைத்து வருகிறது.

''பங்களாதேஷில் பாகிஸ்தானின் இனக்கொலைக்கு எதிராகத் தலையிட்ட இந்திய அரசு இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் பாராமுகமாக நடந்து வருகிறது.

''எனவே இப்பிரச்சினையில் மத்திய அரசைத் தலையிட வற்புறுத்தியும் இலங்கைத் தமிழர்கள் கோரிக்கையை இந்தியா ஐ. நா. சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று கோரியும், தமிழ்நாடு அரசாங்கமே ஓர் தீர்மானத்தைக் கொண்டுவந்து ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் எனத் தமிழ்நாடு அரசாங்கத்தை தமிழர் இயக்கம் கேட்டுக்கொள்ளுகிறது''

—இவ்வாறு அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

## கிழக்கில் தமிழர் கூட்டணி கூட்டங்கள்!

தமிழர் கூட்டணியின் கிழக்கு மாகாண பிரச்சாரக் கூட்ட நிகழ்ச்சிகள் வருமாறு:-

25.8.72—மட்டக்களப்பு.
26.8.72—பட்டிருப்பு.
27.8.72—காலை— மட்டக்களப்பில் மத்திய செயற்குழுக்கூட்டம்.
மாலை கல்முனை.
28-8-72—நிந்தாவூர்.
29-8-72—பொத்துவில்.
30-8-72—கல்குடா.

## அரசின் கொள்கை

**'சுப்பையாவுக்கும் வெள்ளைச்சாமிக்கும் காணி வேண்டியதில்லை. சிங்கள மக்களைத்தான் நாம் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்குக் காணி கொடுத்தால்போதும்.'**

—தேசிய பேரவையில் ஆளுங்கட்சி உறுப்பினர் ரி. பி. ஜெயசுந்தரா.
(தினகரன் 19-8-72)

## தமிழ் பகுதியில் மூன்று மாதங்களில் தனிச் சிங்களத்தில் நிர்வாகம்!

### ஆட்சியாளர் திட்டம் அம்பலம்!

தமிழ்ப் பகுதிகளில் தமிழை நிர்வாக மொழியாக்க அரசு ஒப்புக்கொண்டுவிட்டது என்று அரசாங்கக்கட்சியின் தமிழ்அடிமைகள் தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு பிரசாரத்தை மேற்கொண்டு வரும் அதேசமயத்தில் அவர்களது பிரசாரத்தை அவர்களது எசமானர்களே இப்போது முறியடித்துவிட்டனர்.

தமிழ்ப் பகுதிகளிலும் அடுத்த மூன்று மாதங்களுக்கிடையில் அரசாங்க நிர்வாகத்தை சிங்களத்தில் நடத்துவதே ஆட்சியாளரின் திட்டம் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகிவிட்டது.

திருக்கோணமலையிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் பகுதிக்கு பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி அனுப்பிவைத்துள்ள ஒரு அறிக்கை அரசாங்கத்தின் சிங்களமொழித் திணிப்புத் திட்டத்தை அம்பலமாக்கிவிட்டது.

''சகல அரசகருமங்களையும் இன்னும் மூன்று மாதங்களில் சிங்களத்தில் நடத்த அரசாங்கம் நடவடிக்கையெடுத்துள்ளது. சிங்களத் தேர்ச்சிபெற்ற தமிழ் அரச உத்தியோகத்தர்கள் இப்பொழுது முதலே கூடியவரை சகல கருமங்களையும் சிங்களத்தில் நடாத்தி தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.''

என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சோஷலிசமாம் சோஷலிசம்..!

இலங்கை நிர்வாகசேவையின் மூன்றும் தரத்துக்கு மொத்தம் 39பேரை பொது நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா நியமித்துள்ளார். இந்த முப்பத்தொன்பது பேரில் தமிழர்கள் எத்தனைபேர் தெரியுமா? ஆக நான்கே நான்கு பேர்தான்!

இந்த இலட்சணத்தில்தான் சோசலிசம் சமதர்மம் வேறு பேசுகிறார்கள் ஆளுங் கட்சியினர்! அவர்களது சோசலிசம் மண்ணாய்ப் போக!

## வெள்ளையர் வெளியேறியதுபோல் இந்தியர்களும் வெளியேற வேண்டுமாம்!

## காணி அமைச்சரின் துவேஷக் கூக்குரல்!

''கடந்த பொதுத் தேர்தலின்போது திரு. எஸ். தொண்டமான் பல தேர்தல் கூட்டங்களில் பேசுகையில் கண்டிப் பிரதேசங்களில் (மலையகத்தில்) தாம் ஒரு தமிழ் இராச்சியம் அமைக்கப் போவதாகக்கூறினார். மேடைகள் தோறும் அவர் இவ்வாறு கூறி வந்தார்.

''மலையகத்தில் இத்தகைய தமிழ் ராஜ்யம் எதையும் அமைக்க நான் இடமளிக்க மாட்டேன் என்று இந்தச் சபையில் இதற்கு முன்னர் பல தடவையில் கூறியிருக்கிறேன். இப்போதும் இச்சபை மூலமாகக் கூறுகின்றேன்—''எனது உடலில் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரையும் மலையகத்தில் தமிழ் இராச்சியம் அமைக்க ஒருபோதும் நான் இடமளிக்கமாட்டேன்.

''எமது பிரதேசங்களில் தொண்டமானின் சகாப்தம் முடிந்துவிட்டது! எமதுபிரதேசங்களில் இருந்து வெள்ளையர் வெளியேறினார்கள்: ஆனால் அந்த இடத்தில் இந்தியர்கள் அமர நாம் அனுமதியோம். வெள்ளையர்கள் போனதுபோல இந்தியர்களும் போக வேண்டும். தொண்டமான் எமது பிரதேசங்களில் இருந்து வெளியேற வேண்டும்.''

—தேசிய அரசுப் பேரவையில் காணி அமைச்சர் கொபேயடுவ.

## உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் இன்று 79வது நாள்!

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் தொழில் துறை அமைச்சரின் சப்பல்வாதங்கள் இதோ அம்பலம்!

## தொலைலயடைகிறார் தமிழர் கலுகல்லே விடுகிறார் கப்ஸா!

சென்ற 6-8-72 ஆம் திகதிய தினகரன் வார மஞ்சரியில் கப்பற்றெழில் சுற்றுலா அமைச்சர் திரு. பி. பி. ஜீ. கலுகல்ல அவர்கள் வெளியிட்ட செய்திக்குப் பின்வரும் விபரங்களை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். அவர் பேசும் சகோதரத்துவத்தையும், ஒற்றுமையையும் பொதுமக்கள் தெட்டத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

''மக்கள் அரசு கடந்த இரண்டாண்டு காலத்திலும் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்ற பாகுபாடு காட்டாமல்தான் சேவை செய்துள்ளது. அமைச்சு ரீதியாகவும், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ரீதியாகவும் புள்ளி விபரங்களை எடுத்துப் பார்த்தால் இது நன்கு புலனாகும்'' என்று கூறியுள்ளார்.

மக்கள் அரசு கடந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ் மக்கள்மீது காட்டிய பாகுபாடுகளையும், குறிப்பாக அவரது அமைச்சின் கீழுள்ள கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்களில் காட்டப்படும் பாகுபாடுகளையும், புறக்கணிப்புகளையும் கீழே தரப்படும் விபரங்கள் நன்கு தெளிவுபடுத்துகின்றன. நேர்மையாகவும், நீதியாகவும் நடக்கும் தங்கள் அமைச்சின் கீழ் ஏன் இப்படியான அநீதிகள் நடக்கின்றன.

1. திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்திற்கு முதலில் அப்பகுதியில் வேலையற்றிருப்பவர்களுக்கு முதன்மை கொடுப்பது என்ற அரசாங்கத்தின் கொள்கை மீறப்பட்டு, கிட்டத்தட்ட 200 பேர்வரை வெளியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவற்றுள் ஐந்து பேர் வரையில்தான் தமிழர்கள். ஏன் இதில் பாகுபாடு காட்டப்பட்டது?

2. திருகோணமலைத் துறைமுகத்தில் 99 வீதமான தொழிலாளர் தரம் அற்றோரும், 90 வீதமான தொழிலாளர் தரத்தினரும் தமிழ் பேசும் ஊழியர்களாக இருக்கும் போது ஒரு தமிழ்ப் பதவி உத்தியோகத்தர் தவிர மற்றைய நிருவாக தர உத்தியோகத்தர்களைத் தமிழ் தெரியாதோராக நியமித்து அங்கு பணியாற்றும் தமிழ் பேசும் ஊழியர்கள் மீது தேவையற்ற முறையில் சிங்கள மொழியைத் திணித்து துன்புறுத்தப்படுகிறது.

3. திருகோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டபோது பதவி இழந்த தகுதியும் திறமையுமுடைய சாரதிகளும் கிளினர்களும் இருக்கையில் வெளியிடங்களிலிருந்து 19 சிங்களச் சாரதிகளும், 19 கிளினர்களும் நியமிக்கப்பட்டது ஏன்?

4. கொழும்புத் துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 12 நிறைவேற்று தரத்தினரின் பதவி உயர்வில் தமிழ் ஊழியர்கள் புறக்கணிக்கப்பட்டதை, ஆட்சேபித்தும் அது கவனிக்கப்படவில்லை.

5. திருகோணமலைத் துறைமுகத்திலிருந்த தமிழ் முகாமையாளர் மாற்றப்பட்டது ஏன்?

6. திருகோணமலைத் துறைமுகத்தில் துறைமுக ஆணையாளராகப் பணியாற்றிய திரு. இராசையா வகுப்புவாத அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட்டார்.

7. துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் போது பாகுபாடு காட்டப்படுவதேன்? 1970 க்கும் 1972 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கும் தொழிலாளர் தர, தொழிலாளரற்ற தர ஊழியர்களின் புள்ளி விபரங்களை வெளியிட்டால் உண்மை தெரியும்.

8. தொழிலுக்குச் சேரும் போதோ அல்லது தொழிலாற்றும்போதோ சிங்கள மொழி நிபந்தனையின்றித் தனியார் துறையில் பணியாற்றிய அதிகமான தமிழ் பேசும் ஊழியர்கள் துறைமுகங்கள் தேசியமயமாக்கப்பட்டபோது துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்களுக்குத் தேவையற்ற முறையில் சிங்கள நிபந்தனை விதிக்கப்பட்டு, பதவி உயர்வுகளுக்குப் பெரும் அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கின்றன.

9. துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனத்தில் கிட்டத்தட்ட 200 வகையான பத்திரங்களும், படிவங்களும் உபயோகத்தில் இருந்து வருகின்றன. பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும் நிறுவனத்திலுள்ள பத்திரங்களில் தமிழும் இடம்பெற வேண்டுமெனத் தமிழ் மொழிச் சட்டத்தில் வற்புறுத்தப்பட்டிருந்த போதிலும், பெருந்தொகையான பத்திரங்களில் இருந்து தமிழ் முற்றாக அகற்றப்பட்டிருக்கிறது. தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகக் காட்டப்படும் இப் பாகுபாடான நடவடிக்கையை நடைமுறைத் தமிழ் இயக்கம், மற்றும் நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள் சுட்டிக் காட்டியும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

10. ஊழியர்களின் நலனுக்காகக் கூட்டுத்தாபனத்தின் செலவில் மாதந்தோறும் வெளியிடப்படும் ''எங்கள் துறைமுகம்'' வெளியீடு தனிச் சிங்களத்தில் வெளியிடப்பட்டுளதனால் கூட்டுத்தாபனத்திலுள்ள ஆயிரக் கணக்கான தமிழ் பேசும் ஊழியர்களுக்குப் பாகுபாடு காட்டப்படுகிறது. தமிழ் ஊழியர்களும் மொழிவழித் தொழிற் சங்கங்களும் ஆட்சேபம் தெரிவித்தும் பலனளிக்கவில்லை.

11. துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனத்தின் பிரதம எஞ்சினியராகவும், அமைச்சின் ஆலோசகராகவும் பணியாற்றிய எஞ்சினியர் திரு. இரகுநாதன் மீண்டும் கப்பற்றுறை ஆணைக்குழுவுக்குப் பதவி குறைந்த நிலையில் இடமாற்றம் செய்யப்பட்டது என்?

12. கப்பற்றுறை ஆணைக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்ட கடலக பயிலுநர் நியமனத்தில் தமிழர் புறக்கணிக்கப்பட்டது ஏன்?

13. கப்பற்றுறை ஆணைக் குழுவால் வெளியிடப்படும் ஒரு சில சுற்றறிவிப்பு நிருபங்கள், அறிக்கைகளைவிட ஏனையவை தனிச் சிங்களத்திலேயே இருப்பதால் அங்குள்ள தமிழ் ஊழியர்கள் எத்தனையோ இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இதுபற்றி மொழி வழித் தொழிற் சங்கங்கள் எடுத்துக் கூறியும்கூட பலன் ஏதுமில்லை.

''இலங்கையிலுள்ள எந்த திணைக்களத்துடனும் எந்தப் பிரஜையும் தனது தேசிய மொழியில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. உத்தியோக மொழியில் அனுப்பப்படும் கடிதங்களுடன் தமிழ்மொழி பெயர்ப்பும் அனுப்பப்படுகிறது'' என்று கூறியிருக்கிறீர்கள். நீங்கள் கூறியதற்கு முற்றிலும் முரணாகத் திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் நடந்து கொள்கின்றன என்பதற்குக் கீழே தரப்படும் சில உதாரணங்கள் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன:—

1. நடைமுறைத் தமிழர் இயக்கத் தலைவர் திரு. சு. இளையதம்பி யாழ்ப்பாணத்திலிருந்து 29-3-72 ஆம் திகதியிட்டுப் பதிவாளர் நாயகத்திற்குத் தமிழில் எழுதிய முக்கிய கடிதம் ஒன்றுக்கு 8-5-72 ஆம் திகதியிடப்பட்ட பதிலொன்று சிங்கள மொழியில் இருந்தது. அம்மொழியில் எழுதப்பட்டதை அவர் வாசிக்க முடியாது ஏற்பட்ட கஷ்டத்தை உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ். பண்டாரநாயகா அவர்களுக்கு எழுதியுள்ளார். அதற்குக் கூட இதுவரை பதில் கிடைக்கவில்லை.

2. யாழ்-அரசினர் மருத்துவ பிரசவ விடுதிச்சாலையில் பிள்ளைப் பதிவு தமிழில் பதியப்பட்டிருந்தும், அப்பிள்ளையின் பிறப்புச் சான்றிதழைத் தமிழில் வழக்க மறுக்கிறார்கள். தமிழ்ப் பகுதியில் கூட இந்த உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

3. தங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனத்திற்கு மொழிவழித்தொழிற் சங்கங்களாகிய இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகம், அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கம், மற்றும் பொது நிறுவனங்களும், தனிப்பட்டோரும் தமிழில் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படாதிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

இதுபோன்ற பல அநீதிகள் அரசாங்க அலுவலகங்களிலும், திணைக்களங்களிலும் நடந்து வருவதை நீங்கள் அறியாதிருப்பதையிட்டு வருந்துகிறோம். எனினும் இந்தக் குறைபாடுகளை நீக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென உறுதிமொழி அளிப்பீர்களாயின் தமிழ்ப்பேசும் மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவர்.

## எங்கோ பிறந்த சிங்களக் குடிகளுக்கு முதலிக் குளத்தில் காணி!

## சொந்த மண்ணைச் சேர்ந்த தமிழருக்கு கிடைப்பதுவோ முகத்தில் சாணி!

### ஏன் இந்த அநீதி? தூங்குவதோ நீதி? இப்படிக் கேட்கிறார் எம் அருமை 'நேமி'!

செந்தமிழர் திருநாடாம் திருகோணமலையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தொடர்ந்து நடத்தி, திருகோணமலையை சிங்கள மயமாக்கும் ஆட்சியாளரின் சூழ்ச்சி தொடர்கிறது.

இந்தச் சூழ்ச்சிகளை முறியடிப்பதில் திருகோணமலை பா. உ. திரு. பா. நேமிநாதன் உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அண்மையில் முதலிக்குளத்தில் சிங்களக் குடியேற்றத்தை நடத்துவதற்கு நடந்த முயற்சியை முறியடிக்க திரு. நேமிநாதன் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது.

முதலிக்குளத்தில், ஏற்கெனவே தமிழ்க் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கி, பின்னர் அவர்களுக்கு மறுக்கப்பட்ட காணிகளை புதிதாகப் பங்கிடு செய்வதற்கென நடத்தப்படவிருந்த காணிக் கச்சேரிக்கு அல்லை, கந்தளாய் குடியேற்றவாசிகளிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

அல்லை, கந்தளாய்க் குடியேற்றவாசிகளுக்கு மட்டுமே முதலிக்குளத்தில் காணிகளை வழங்குவது என்ற திட்டம் சிங்களவர்களை மட்டுமே குடியேற்றுவதற்கான ஒரு சூழ்ச்சித் திட்டம் என்பதை புரிந்து கொண்ட திரு. நேமிநாதன் அதனை ஆட்சேபித்து காணிக் கமிஷனருக்கு கடிதம் எழுதினார். முதலிக்குளப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கே அப்பகுதிக் குடியேற்றத்தில் காணிகள் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து, குறித்த காணிக் கச்சேரியை உடனடியாக நிறுத்த காணிக் கமிஷனர் உத்தரவிட்டார்.

ஆனாலும், முதலிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் சிங்களவரையே குடியேற்ற வேண்டும் என்ற திட்டத்தை வேறு வழியில் செயல்படுத்த முறை செய்யப்பட்டது. இதன்படி [illegible] குடியேற்ற வாசிகளல்லாத 24 சிங்களக் குடிகள் அரசாங்க லொறிகளில் ஏற்றி வரப்பட்டு, முதலிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்டனர் என்று அறியப்படுகிறது.

இந்த அநியாயத்தைக் கண்டு பொங்கியெழுந்த முதலிக்குள நிரந்தர கொலனி வாசிகளான சுமார் 10 தமிழ்க் குடிகள், குறித்த குடியேற்றக் காணிகளில் தாங்களாகவே சென்று குடியேறினர்; குடிசைகள் அமைத்தனர்.

இந்தப் பத்து தமிழ்க்குடியேற்றவாசிகளினதும் குடிசைகள் இரவோடிரவாக எரிக்கப்பட்டதாம். சட்டவிரோதமாக வேறு எங்கோ இருந்து வந்து குடியேறிய சிங்களக் குடிகளை விட்டுவிட்டு, அந்தப் பகுதியில் உரிமையுள்ள தமிழ்க்குடியேற்றவாசிகள் பத்துப் பேரையும் பொலிசார் கைது செய்து சிறையிலடைத்தனர்.

இதையறிந்த திரு. நேமிநாதன் இப்பிரச்சினையில் தலையிட்டு, இந்தப் பத்துத் தமிழரையும் பிணையில் விடுவித்ததுடன், இது சம்பந்தமாக பிரதமருக்கும் தந்தி மூலம் அறிவித்துள்ளார்.

முதலிக்குளக் காணி விநியோகம்பற்றி ஆதியோடந்தமாக ஒரு பூரண விசாரணையொன்றை நடத்தி அநீதியைக் களைந்தெறியும்படியும் அவர் காணிக்கமிஷனரைக் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மால் முடியும்!

அன்பு நண்பா,

'எனது உடலில் கடைசிச்சொட்டு இரத்தம் இருக்கும்வரையும் மலையகத்தில் தமிழ் இராச்சியம் அமைத்திட நான் ஒரு போதும் இடமளித்திட மாட்டேன்—'

—இவ்வாறு வீரம் பொங்கிட உறுதியெடுத்திருப்பவர் ஓர் சாதாரண அரசியல்வாதியல்லர்; அமைச்சர் பதவியிலிருப்பவர்! இப்படிக்கூறிய இடமோ மாலைநேரக கூட்ட மேடையோ, மற்றும் பொது இடத்திலோ அல்ல; தேசிய அரசுப் பேரவை!!

ஆம் நண்பா, நிலச்சீர்திருத்த மசோதாவிலுள்ள 22வது சரத்தின் 3வது உபபிரிவின் (அ) பகுதியை நீக்குவதன் மூலம், இந்நாட்டு மண்ணுக்கு தலைமுறை தலைமுறையாக உழைத்து ஓடாகிப்போன தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிலம் கிடைத்திடும் வாய்ப்பினைப் பறித்து விடாதீர்கள் என்று அமைச்சரை நோக்கி, ஆளுங்கட்சியிலுள்ள அசீசும், நம்முடைய தமிழரசு பா. உ. க்களும் தேசிய பேரவையில் உருக்கமாகக் கேட்டபோது தான், மேற்கண்டவாறாக எடுத்தெறிந்து பேசி இருக்கிறார் காணி அமைச்சர் கொப்பேகடுவ!

''உழுபவனுக்கே நிலம் சொந்தமாக வேண்டும்'' என்று அரசாங்கக்கட்சி ஆதரவாளரான திரு. வி. பொன்னம்பலம் தெல்லிப்பழையில் ஒரு கூட்டத்தில் (16-8-72 ஈழநாடு) பேசி வாய் மூடுமுன்னர், காடாகிக்கிடந்த மலைநாட்டை நாடாக மாற்றியமைத்திட ஓடாக உழைத்த தொழிலாளிக்கு நிலம் தர மாட்டோம் என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார் காணி அமைச்சர் நாடாளுமன்றத்தில்!

**''வெள்ளையர்கள் நாட்டைவிட்டு வெளியேறியதுபோல், இந்தியர்களும் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்! என்றும் அமைச்சர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்!**

வெள்ளையன் இந்நாட்டைச் சுரண்ட வந்தான்; ''இந்தியர்களோ'' பல தலைமுறைகளுக்கு முன்னர் இந்நாட்டுக்காக உழைக்க வந்தார்கள்; இந்நாட்டை பொன் விளையும் பூமியாக்கியவர்கள் அவர்கள்; அவர்களின் உழைப்பிலிருந்து பெறப்படும் அந்நியச் செலாவணியைக் கொண்டுதான் அமைச்சர்கள் கார்களில் உல்லாசப் பவனி வருகிறார்கள்; அகிலம் சுற்றுகிறார்கள்; ஆட்சி நடத்துகிறார்கள்.

இந்த உண்மையை மறந்து — நன்றி கொன்று வாயில் வந்தபடி அமைச்சர்கள் பேசுகிறார்கள் என்றால், அவ்வளவு தூரம் ஆளும் மமதை சிங்கள இனத்துக்கு இன்று ஏறி விட்டது என்றால்—அவர்கள் அழிவின் விளிம்பில் நிற்கிறார்கள் என்பதுதான் பொருள்! ஆம், அழிவுக்கு முன் அகந்தை என்பது பெரியோர் கூறிச்சென்ற முதுமொழி!

அமைச்சர், ஆங்காரக் குரலில், ஆணவத் தொனியில் பேசியிருந்தாலும், ஆளும் வர்க்கத்தின் போக்கு இன்னதென்பது அமைச்சரது கூற்றிலிருந்து நமக்குத் தெளிவாகப் புரிகிறது—

**மலையகத்தில் — அதாவது கண்டியப் பகுதிகளில் மலைநாட்டுத்தமிழர்கள் தங்கள் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாத்து தலைநிமிர்ந்து உரிமைகளுடன் எதிர்காலத்தில் வாழ முடியாது என்பதே அந்த உண்மையாகும்.**

ஆம் நண்பா, இந்நாட்டில் எதிர்காலத்தில் தமிழினம் தலை நிமிர்ந்து, சுயாட்சி அமைத்து வாழ்ந்திடவேண்டுமானால், அதற்கு ஒரேவழி, தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஆங்காங்கே, சிறுகச்சிறுகப் பிரிந்து வாழாது — தமிழ்த்தாயகமாம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேறி சேர்ந்து வாழ முன்வர வேண்டும்! 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பதுபோல், ஈழத்தமிழினத்தின் பலம், சிதறி வாழ்வதில் அல்ல — சேர்ந்து வாழ்வதிலேயே தங்கியிருக்கின்றதென்ற உண்மையை ஒவ்வொரு தமிழனும் புரிந்திட வேண்டும்.

மலையகத்தமிழர்கள், நன்றி கெட்டவர்களுக்காக — சிங்கள நாட்டுக்காக உழைத்து உழைத்து, உருக்குலைந்து கூலிகளாக இதுவரை வாழ்ந்தது போதும்! தங்கள் சொந்த தாயகமாம் ஈழத்தமிழ் நாட்டில் குடியேறி தமிழ்த் தாயகம் அமைத்திடும் பணியில் அவர்கள் ஈடுபடவேண்டும்! நாம், விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன தமிழினம் தனித்துவத்துடன் ஈழத்தில் வாழுவதற்கு இது ஒன்றே நமக்குள்ளவழி!

கண்டிப்பகுதியில் தமிழ் இராச்சியம் ஒன்றை அமைக்க தனது உயிர் இருக்கும்வரை தாம் அனுமதிக்கப் போவதில்லை என்ற அமைச்சரின் 'வீர' உரை, நமக்கு ஆத்திரத்தையோ கோபத்தையோ ஏற்படுத்தவில்லை, மாறாக பல உண்மைகளையே புட்டுக்காட்டுகிறது!

கண்டியை ஆண்ட கடைசி மன்னன் தமிழனாக இருந்திட்டபோதிலும், கண்டிப்பகுதி ஒரு தனி அரசாக இருந்ததென்பதும், அது சிங்களவர்களின் அரசுதான் என்பதும் வரலாற்றுண்மைகள்! அந்த உண்மைகளை வைத்துப்பார்த்திடும் போது, காணி அமைச்சரின் 'பிரதேச' உணர்ச்சி நிச்சயம் பாராட்டப்படவேண்டியதொன்றே!

**கண்டி எப்படி தனி அரசாக அன்று இருந்ததோ அதே போலவே, வடக்கு, கிழக்கு பகுதிகளும் தனி அரசாக — தமிழரசாக — இருந்தன வென்பதும் வரலாற்றுண்மை!**

**இந்த வரலாற்றுண்மையைத்தான் நாம் இன்று எடுத்துக்காட்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தனியாட்சி கோருகிறோமே தவிர — மலைநாட்டையும் சேர்த்து 'தமிழ் இராச்சியம்' அமைக்கப் போவதாக எப்பொழுதும் நாம் கூறியதில்லை! கண்டிய சிங்கள மக்களுக்கும் ஒரு தனியரசு வேண்டும் என்று அமைச்சர் கொப்பகடுவை கோருவாரானால் நிச்சயம் அந்தக் கோரிக்கையை நாம் ஆதரிப்போம்! வரவேற்போம்!!**

இந்த வரலாற்றுண்மைகளின் அடிப்படையில்தான் தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணய சபைக்கு சமர்ப்பித்திருந்த நகல் அரசியல் திட்டத்திலும் கண்டிப்பகுதியையும் ஒரு சுயாட்சி அமைப்பாக ஏற்றுக்கொண்டிருந்தது!

## அரசியல் மேடை

ஆக நண்பா, காணி அமைச்சருக்கு நாம் அளித்திட வேண்டிய பதில் — ''உங்கள் 'பிரதேச' உணர்ச்சியைப் பாராட்டுகிறோம்; தலை வணங்குகிறோம்; உங்கள் உடலில் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரை மலையகத்தில் எப்படி ஒரு தமிழ்இராச்சியத்தை அமைத்திட இடமளித்திடப் போவதில்லை என்று உறுதி எடுத்திருக்கிறீர்களோ, அதேபோல உங்களைப் பின்பற்றித் தமிழர்களாகிய நாமும் பின்வருமாறு உறுதியெடுக்கிறோம்!

**எமது உடலில் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரை தமிழ் ஈழமாம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு தனிச் சிங்கள இராச்சியம் அமைத்திட தமிழ் மக்களாகிய நாம் ஒருபோதும் இடமளியோம்.**

அமைச்சருக்கு நாம் தந்திட வேண்டிய உறைப்பான பதில் இதுதான்!

நம்முடைய நாட்டில் நமது ஆட்சியை நிறுவிடுவோம்; தமிழினத்துக்குத் தனியாட்சி கண்டிடுவோம் என்று நாம் கூறுகிற நேரத்தில் இது முடியுமா நம்மால்? அதிகார பலமும், ஆயுதபலமும் அவர்களிடமுண்டே; அவர்களோ பலர்; நீங்களோ சிலர்; போதாக் குறைக்கு சீனாவுமன்றோ ஆயுதம் கொடுத்து உதவுகிறது உங்களை நசுக்கிட; இந்நிலையில் தனியாட்சி அமைத்திட உம்மால் எப்படி முடியும்? என்று நம்மவர்கள் சிலர்கூட அச்சமும், ஐயமும், ஆசங்கையும், ஐயவினாவும் எழுப்பி வருவதனைப் பார்க்கிறேன்—

**விடுதலைக்குப் போராடுவது என்று முடிவெடுத்த மக்களின் உள்ளங்களில்—விடுதலைக்குப் போராடியே தீரவேண்டும் என்ற கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களின் உள்ளங்களில் — 'நம்மால் முடியுமா' என்ற சஞ்சலக் கேள்வியே எழுவது ஆகாது!**

'எப்படியும்' விடுதலையை வென்றெடுத்தால் மட்டுமே நமக்கு வாழ்வு என்ற நிலையில் வருகின்ற வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் எப்படிப் பயன்படுத்தினால் நமக்கு விடுதலை கிட்டும் என்பது பற்றியே நாம் சிந்தித்திட வேண்டுமே தவிர—'நம்மால் முடியுமா' என்ற பலவீனமான எண்ணம் ஒரு துளிகூட நம் உள்ளத்தில் எழுந்திடுதல் ஆகாது!

சொந்த அன்னையை மாற்றான் ஒருவன் மானபங்கப்படுத்திட முயலும்போது—மான பங்கப்படுத்த முயல்பவன் தன்னைவிட வலிமையுள்ளவன் ஆயிற்றே, அவனுடன் மோதினால் தனக்கு ஆபத்து-வருமே என்று மான உணர்ச்சி மிக்க [illegible] பார்த்துக் கொண்டிருப்பானா? எப்பாடுபட்டாவது [illegible] மானத்தைக் காத்திட வேண்டியதன்றோ அந்த மகனின் கடமை! அதை அவன் அப்போது செய்யாவிட்டால் பிறகு அவன் வாழ்ந்தென்ன இறந்தென்ன?

அதே நிலையிலேதான் தமிழினம் இன்று இருக்கிறது. தமிழன்னையின் துயர் துடைத்திட போராடியே தீரவேண்டிய நிலையில் தமிழ் மக்கள் இன்று இருக்கிறார்கள். எனவே கடமையை ஆற்றிட நாம் முன்வரவேண்டுமே தவிர—பலனை எதிர் பார்த்திடுதலோ, விளைவு என்னவாகுமோ என்று ஆரூடம் பார்த்திடுதலோ ஆகாது!

வங்கதேச விடுதலைப் போராட்டத்தின் போது வங்க மக்கள், எல்லா ஆயுதங்களும் செய்துகொண்டு போராட்டத்தில் குதித்திடவில்லை. பாகிஸ்தானிய இராணுவத்திடம் பீரங்கிகளும், இயந்திரத் துப்பாக்கிகளும், மற்றும் பயங்கர ஆயுதங்களும் இருந்தன; அவற்றை எதிர்த்து, ஆரம்பத்தில் அலவாங்குகளும் கம்புகளும், மண்வெட்டிகளும் மூங்கில் கழிகளும் தடி தண்டுகளும் கொண்டுதான் வங்கதேசமக்கள் போராடினார்கள்! எப்படியும் போராடி விடுதலையை நிலைநாட்டுவதைத் தவிர வேறுவழி இல்லையென்ற நிலையில்தான் அவர்கள் அப்படிப் போராடினார்கள்!

**ஆக இதிலிருந்து தெரிந்திடுவது என்ன? விடுதலைக்குப் போராடும் மக்களுக்கு முதல் தேவை, எப்படியும் விடுதலையைப் பெற்றேயாகவேண்டும் என்ற வைராக்கியமும் உறுதியுமே! அந்த உறுதியும் வைராக்கியமும் நம்மிடம் இருந்தால், மற்றத் தேவைகள் தானாகவே நமக்கு கிடைக்கும்! எனவே விடுதலை உணர்ச்சியையும் மன வைராக்கியத்தையும் தமிழ் மக்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்! பலவீன உணர்ச்சி கிஞ்சிற்றும் தலை காட்டுதல் ஆகாது!**

அதிலும், அறவழிப்போராட்டங்களின் மூலமும் அஹிம்சையின் மூலமும் நமது சுதந்திரத்துக்காகப் போராடிட உறுதிபூண்டிருக்கும் நமக்கு அச்சமற்ற தன்மையும், வைரமான உள்ளமும் எப்பொழுதும் இருந்திட வேண்டும்!

அயல்நாடு உதவுமா நமது போராட்டத்துக்கு — இந்தியநாடு உதவிபுரியுமா என்று கேட்டிடுவோரும் நம்மத்தியில் இருக்கிறார்கள். அவர்களுக்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வங்கதேசப்போராட்டம்பற்றி இந்தியப்பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட ஒரு கருத்தைத்தான இங்கு சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

**''வங்கதேசமக்கள் — இளைஞர்களும் யுவதிகளும், தாங்களே வீறு கொண்டு எழுந்து முக்திபாஹினியெனும் இயக்கத்தை அமைத்து உறுதியுடன் விடுதலை போராட்டத்தில் குதித்து எண்ணரிய தியாகததைப் புரிந்திராவிட்டால், இந்தியா வங்கத்துக்கு எந்த வகையிலும் உதவி செய்திருக்க முடியாது.''**

ஆம், நண்பா, விடுதலைப்போராட்டம் பற்றி 'சோதிடம்' பார்த்திடுவதிலும் பின் விளைவுகள்பற்றி முன் கூட்டியே ஆரூடம்பார்த்திடுவதையும் விடுத்து, கடமையைச் செய்வோம் — பலனை தெய்வத்திடம் விட்டு விட்டு!!

**உன் அன்புத்தோழன்**

கோவை-மகேசன்

## ஏ இளைஞனே

— திருக்கோணமலைக்கவிராயர் —

சிங்களத் தீப்பிழம்புள்
செந்தமிழ் அன்னை நின்று
உங்களைக் கையைக்காட்டி
உரக்கவே அழைக்கின்றாளே
தங்கம் நீ தமிழன், ஏறு
தமிழ்க்கனல், தாயின்மானம்
எங்கணும் காப்பேன், என்று
எரி தழலாக மாறு.

சங்கதி தெரியுமா — டேய்!
சரித்திரம் புரியுமா; தாய்
அங்கையை ஏந்திப் பிச்சை
அடைக்கலம் கேட்கின்றாளே!!
சங்கமம் ஆகு போ! போ!!
சமர்க்கள நாதம் காதில்
எங்கணும் ஒலித்திடட்டும்
என் தமிழ் விழித்திடட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# முதுகில் புண் !

உலகின் எந்த மூலை முடுக்கிலும் எத்தகைய சர்வதேசிய மாநாடுகள் நடைபெற்றாலும், அவற்றில் எல்லாம் விழுந்தடித்துக்கொண்டு இலங்கையும் பங்கு பற்றத் தவறுவதில்லை.

இத்தகைய மாநாடுகள் எங்கு நடந்தாலும் — அது அவ்வளவு தூரம் அத்தியாவசியமானதாக, முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லாத போதிலும் — இலங்கையின் சார்பில் பிரதிநிதிகள், அம்மாநாடுகள் யாவற்றிலும் விழுந்தடித்துக்கொண்டு பங்குபற்றுவதை கண்கூடாக கண்டுவருகிறோம்.

அமைச்சர்களும், அரை அமைச்சர்களும், அரசாங்கக் கட்சி பா. உ. க்களும் அரசாங்க அதிகாரிகளும், அந்நியச் செலாவணியையும் வீணடித்துக்கொண்டு, அந்த மாநாடு இந்த மாநாடு என்ற சாட்டில் அடிக்கடி அகிலம் சுற்றி வருவதையும் பார்த்து வருகிறோம் —

ஆனால் அடுத்த திங்கள் அதிமுக்கிய மாநாடு ஒன்று — சர்வதேசிய மாநாடு — கனடா நாட்டில் நடக்கவிருக்கிறது.

அதுவும் இலங்கையைப் பொறுத்தவரை — அது மிக முக்கியத்துவம் வாய்ந்த மாநாடு என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

ஆம், யுனெஸ்கோ என அழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் கல்வி கலாசார கழகம் 'சிறுபான்மை இனப்பிரச்சினைகள்' பற்றி ஆராய்வதற்கு இந்த மாநாட்டை கனடாவில் கூட்டுகிறது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கென இரண்டு பிரதிநிதிகளை அனுப்புமாறு இலங்கைப் பல்கலைக்கழகத்திடம் மேற்படி ஸ்தாபனம் அழைப்பு விடுத்திருந்தது.

**இலங்கை, இனப்பிரச்சினை காரணமாக இன்று இரண்டாகப் பிளவுபடக் கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு நாடு. இலங்கையில் வாழும் சிறுபான்மை இனமாகிய தமிழ்த்தேசிய இனம் பெரும்பான்மை இனத்திடமிருந்து முற்றாகப்பிரிந்து தங்களுக்கெனத் தனிநாடு ஒன்றை அமைத்துக்கொள்வது பற்றி இன்று சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.**

எனவே இலங்கை பிளவு படாமல் தொடர்ந்து ஒரே நாடாக இருந்திடவேண்டுமாயின் தமிழ்த்தேசிய இனத்தின் பிரச்சினைகளுக்கு கௌரவமான முறையில் உடனடியாகத் தீர்வுகாணப்படவேண்டும்.

இந்த நிலையில் கனடாவில் நடைபெற விருக்கும் 'சிறுபான்மை இனப்பிரச்சினை' சம்பந்தப்பட்ட மாநாட்டில் இலங்கை ஆர்வமும் அக்கறையும் காட்டும் என்று 'யுனெஸ்கோ' போன்ற நிறுவனங்கள் எதிர்பார்த்திருந்தால் அதில் ஆச்சரியப்பட இடமில்லை.

அதிலும் இலங்கையைப் போன்ற இரண்டு தனித் தனி தேசிய இனங்களைக்கொண்ட ஒரு நாடான கனடா இரு மொழிகளையும் அரசாங்க மொழிகளாக்கி, சமஷ்டி அரசமைப்பு மூலம் இரு தேசிய இனங்களுக்கும் சுயாட்சி வழங்கி சிறுபான்மைப் பிரச்சினையை எப்படி தீர்க்க முடியும் என்ற கேள்விக்குப் பதிலாக விளங்குகிறது.

அத்தகையதோர் நாட்டில் நடைபெறும் 'சிறுபான்மை இனப்பிரச்சினை' பற்றிய மாநாட்டில் இலங்கையும் கலந்து கொள்ளுமானால் இலங்கை அரசின் கண்கள் திறக்க அது ஒருவேளை உதவியாக இருக்கக்கூடும்!

ஆனால் இலங்கை அரசோ அந்த மாநாட்டிற்கு செல்லவிருந்த இரு பல்கலைக் கழகப் பிரதிநிதிகளையும் அங்கு செல்லக்கூடாதென்று தடுத்துவிட்டது.

இதற்கு அரசு தரப்பில் கூறப்பட்டுள்ள பதில்—குறித்த பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் இருவரும் தேசியக் கருத்தை பிரதிபலிப்பார்கள் என்று நம்புவதற்கில்லையாம். இந்த மாநாட்டுக்கு அரசுதான் பிரதிநிதிகளை அனுப்புவது முறையானதாம்!

**சிறுபான்மை இனப்பிரச்சினை பற்றி ஆராய்வதற்கு கூடும் இந்த மாநாட்டுக்கு, உண்மையில் இந்நாட்டுச் சிறுபான்மை இனத்தினரின் சார்பில் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக வாதாடும் தமிழர் கூட்டணியிலிருந்தே பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்படவேண்டும். அதுவே முறையானதும் நேர்மையானது மாகும். அது நடைபெறவில்லை—போகட்டும்!**

பல்கலைக் கழகம் இந்நாட்டின் அதி உயர்ந்த கல்விப் பீடம். அந்தப் பீடத்திலிருந்து இரு விரிவுரையாளர்கள் கனடா மாநாட்டுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளபோது அவர்களையாவது அங்கு அனுப்பிவைத்திருக்கவேண்டியதே அரசின் கடமையாகும்! அதை வேண்டுமென்றே அரசு தட்டிக் கழித்துவிட்டது!

ஏன் இவ்விதம் அரசு தட்டிக் கழித்ததென்பதையும் நாம் அறிவோம்!

ஒன்று —இலங்கையில் சிறுபான்மைப் பிரச்சினை என்று ஒன்று இல்லை என வெளியுலகுக்குக் காட்டிக்கொள்ள அரசு இன்னும் முயற்சிக்கிறது.—கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிட்டது என்று கருதிய பூனைபோல்!

மற்றது — இத்தகைய மாநாடுகளில் கலந்து கொள்ளுவதற்கு மற்றவர்களை அனுமதித்தால் இலங்கையில், சிறுபான்மை இனத்துக்கு தாம் இழைத்துவரும் கொடுமைகளும் அநீதிகளும் உலகெங்கும் தெரிந்துவிடும் —என்று அரசு அஞ்சுகிறது!

ஆம், முதுகில் புண்ணுள்ளவர்கள் எப்படிக் காட்டுக்குள் துணிந்து நுழைய முன்வருவார்கள்?

# தமிழர் கூட்டணியைப் பிளக்க நாளேடுகள் நடத்தும் சதி!

## தினகரன், தினபதி—சிந்தாமணி சோதாக்களின் கபட நாடகம்!

தமிழினத்தின் ஒற்றுமைக் கோட்டையாம் தமிழர் கூட்டணியைச் சிதறடித்திடச் செய்யும் சதி முயற்சியில்மீண்டும் தினகரன்—தினபதி—சிந்தாமணிக் கும்பல் ஈடுபடத் தொடங்கியுள்ளது. கூலிக்கு மாரடிக்கும் சோற்றுத் துருத்திகள் இந்த திட்டமிட்ட ஈனத்தனமான வேலையில் இறங்கியுள்ளன.

'தினகரன்' தமிழர் கூட்டணி ஆரம்பமான காலத்தில் கூட்டணியைச் சிதறடிக்கவும், கூட்டணியின்மீது தமிழ் இளைஞர்களுக்கு அவநம்பிக்கை ஏற்படச் செய்யவும் கூடிய திட்டமிட்ட பல பொய்ச் செய்திகளை வெளியிட்டு வந்தது தெரிந்ததே. தமிழர்களாகப் பிறந்தும் தமிழினத்துக்கு அள்ளிவைக்கும் 'திரு'குதாளச் செய்திகள் பலவற்றைத் தினகரன் வெளியிட்டு வந்தது.

இவற்றினலெல்லாம் தமிழர் கூட்டணியை உடைக்க முடியாதெனக் கண்டுகொண்ட தினகரன் சோதாக் கும்பல் கூட்டணி சார்பான செய்திகளைப் போட்டால் மட்டுமே தமது வியாபாரம் நிலைக்கும் என்பதைக் கண்டு கொண்டதால், கூட்டணி சார்புபோல சிலநாள் காட்டிக் கொண்டது.

ஆனலும் நாய் வாலை நிமிர்த்த முடியுமா? இப்போது மீண்டும் தனது ஈனத்தனமான வேலையைத் தொடங்கி விட்டது. 20-8-72 தினகரனின் முன் பக்கத்தில் தனது 'திரு'குதாள வேலையைக் காட்டியிருக்கிறார் தினகரனின் வாரமஞ்சரிநிருபர்.

'தமிழர் கூட்டணிக்குள் ஓர் அச்சம்—எதிர்த் தமிழ்க்கட்சிகளை ஒழிக்க முயற்சி? — கொடிய பிரச்சினையில் தமிழரசுக்கட்சி போக்குப்பற்றிஅதிருப்தி'' என்ற தலைப்பில் வெளியிட்ட செய்தி விஷமத்தனமானதாக வேண்டுமென்றே தமிழர் கூட்டணியைப் பிளவுபடுத்தும் நோக்குடன் கட்டிவிடப்பட்ட பொய்ச் செய்தியாகும். இச்செய்தி உண்மையாக இருந்தால் செய்தியைத் தரும் நிருபரின் பெயரையும் கூடவே வெளியிடும் தினகரன் என் இந்தச் செய்திக்கு மட்டும் எழுதியவரின் பெயரைப்போடவில்லை?பெயரைப்போடுவதற்கு அந்தத் 'திரு'குதாள நிருபருக்குமுதுகெலும்பில்லையா! அல்லது தமிழ் மக்களின்வெறுப்புக்கு ஆளாகவேண்டும் என்ற அச்சமா?

தினகரன் சோற்றுத் துருத்திகளுக்கு ஒன்று கூற விரும்புகிறோம்-முதலில் தமிழன்என்ற உணர்வுடன் இனி மேலாவது உங்கள் கடமையைச் செய்யுங்கள். தமிழர் ஒற்றுமையை உடைக்கும் பொய்ச் செய்தியை எழுதி அதனல் வரும் சில ரூபாய்களைப் பெற்று வயிறு கழுவுவதிலும் பட்டினி கிடந்து சாகலாமே!

இதேபோல தினபதி—சிந்தாமணிக் கும்பலும் இந்தச் சேட்டைகளில் இறங்கியுள்ளது. தினபதி—சிந்தாமணிக் கும்பலின் நரித்தந்திரத்தையும் நயவஞ்சகத்தையும் தமிழ் மக்கள் அறிவார்கள். சிரங்கு, சொறி பிடித்தவனை ஒதுக்கி வைப்பது போல தினபதி—சிந்தாமணி பத்திரிகைகளை தமிழ் மக்கள் இன்று தாங்களாகவே ஒதுக்கி வைத்து விடுகிறார்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொடங்கத் திட்டமிட்டிருந்து பின் கைவிட்ட வேலை நேரப் போராட்டத்தை வைத்துக்கொண்டு கூட்டணியைப் பிளவுபடுத்த சிந்தாமணி எனும் இச் சகுனி ஏடு ஆகஸ்ட் 20ம் திகதி இதழில் முயற்சித்து மூக்குடைபட்டுள்ளது.

எந்தச் செய்தியையும் முந்தித்தருவதாக பீற்றிக் கொள்ளும் தினபதி—சிந்தாமணிக் கும்பல், திரு. தொண்டமான் தொடங்கவிருந்த வேலைநேரப் போராட்டத்தைப் பற்றிய செய்திகளை முந்தித் தந்த 'இலட்சணத்தை'ப் பாருங்கள்.

இ. தொ. கா. தனது உத்தேச வேலை நேரப் போராட்டத்தை கைவிடப் போவதாக கூறும் செய்தியை வீரகேசரி 19.8.72 இதழிலேயே முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டுவிட்டது.

அதன்பின், மறுநாள் (20.8.72) எந்தச் செய்தியையும் முந்தித் தருவதாக டமாரமடிக்கும் தெருப் பொறுக்கி தினபதியின் அக்காள் 'சிந்தாமணி'யோ — ''மலையகத்தில் நாளை வேலை நேரப் போராட்டம்— பொலிஸ் பந்தோபஸ்து வெகுவாக அதிகரிப்பு — தமிழரசுத தொழிற சங்க எதிர்ப்புக் குறித்து இ. தொ கா. வட்டாரங்கள் பெரும் கவலை — தமிழர் கூட்டணிக் கொள்கை குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டதாக வியாக்கியானம்'' — என்னும் தலைப்புக்களுடன் முன்பக்க முகப்புச் செய்தியை வெளியிட்டிருந்தது.

முதல் நாள் வீரகேசரி செய்தியைக்கூட சிந்தாமணி ஆசிரியர் பார்க்கவில்லைப் போலும்! அல்லது இ. தொ. கா. போராட்டத்தைக் கைவிட்டது தெரிந்திருந்தும், தமிழரசுத் தொழிற் சங்கமான இ. தொ. கழகத்துக்கும் இ. தொ. கா. வுக்கும் வேலை நிறுத்தம் சம்பந்தமாக கருத்து வேறுபாடிருப்பதாக வேண்டுமென்றே பெரிதாகஎடுத்துக்காட்டி தமிழர் கூட்டணியை பிளவுபடுத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த 'சிந்தாமணி' திட்டமிட்டிருக்கிறது. தமிழர் கூட்டணியை பிளவுபடுத்தும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக செய்திகளை பிந்தித்தந்தாலும் பரவாயில்லை என்று தினபதிக் கும்பல் திட்டமிட்டிருந்தது போலும்!

ஆனல் இதிலும் தினபதி—சிந்தாமணிக் கும்பலுக்கு தோல்விதான். இலங்கைத்தொழிலாளர் கழகம், ஆரம்பத்தில் இ. தொ. கா. வின் போராட்டம் குறித்து சில கருத்துவேறு பாடுகள் கொண்டிருந்தபோதிலும், கடைசித் தருணத்தில் அக்கருத்து வேறு பாடுகள் களையப்பட்டு இ. தொ. கா. வுடன் சேர்ந்து இலங்கைத்தொழிலாளர் கழகமும் போராட்டத்தில் இறங்க முடிவு செய்திருந்தது என்ற உண்மையை தினபதி—சிந்தாமணிக் கும்பல் அறியாவிட்டாலும், இ. தொ. கா. அறியும். இ. தொ. கா. போராட்டம் தொடங்கியிருந்தால், அதற்கு அனுசரணையாக இ. தொ கழகம் இருந்திருக்கும்.

இந்த உண்மைகளை அறியாது, தமிழர் கூட்டணியை பிளவு படுத்திவிட தினபதி—சிந்தாமணி கும்பல் எத்தனை ஆகாயக்கோட்டை கட்டினலும் அது உடைந்து தகர்ந்து போய்விடும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

20-8-72ந் திகதி வெளிவந்த தினகரனே தமிழர் கூட்டணிக்குள், தமிழ் காங்கிரசுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் பிளவை ஏற்படுத்த முயற்சித்திருக்கும் அதே வேளையில், அதே நாள் சிந்தாமணியோ, இ. தொ. கா. வுக்கும் தமிழரசுக்கும் பிளவு உண்டாக்க முயற்சித்திருக்கிறது.

ஆக இதிலிருந்து இந்த ஏடுகளின் ஒரே நோக்கம் என்ன என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள முடியும். புரிந்து கொள்வது மட்டுமல்ல—எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டும்.

தமிழர் கூட்டணித்தலைவர்களும், தமிழர் கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகளும் இந்தப்பத்திரிகைச் செய்திகளினல் ஒருபோதும் கலவரமடையவோ பிளவுபடவோ மாட்டார்கள். பத்திரிகைச் செய்திகளை நம்பி அவர்கள் அரசியல் நடத்தவில்லை. ஒருவரையொருவர் நம்பி, ஒருவருடன் ஒருவர் கலந்துபேசி, உள்ளத்துடன் உறவாடியே தமிழர் கூட்டணியை நடத்திச்செல்கிறார்கள்.

எனவே நாளேடுகளின் நரித்தனங்களைப் புரிந்து கொண்டு தமிழ் மக்கள் தாம் தமக்குள் வேற்றுமையை வளர்க்காது ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும்.

### தமிழரசுப் பிரமுகர் நல்லூர் கி. ச. தலைவர்

நல்லூர் கி. ச. தலைவராக தமிழரசுக்கட்சி உறுப்பினரும் தமிழர் கூட்டணி ஆதரவாளருமான திரு. தில்லைவிநாயகம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

### உபந்நியாசம் ஆராதனை!

இலங்கை பெந்தேகொஸ்தே சபையின் ஆதரவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இம்மாதம் 24 முதல் 27ம் திகதிவரை தினமும் மாலை 5 மணிக்கு ஆராதனைகளும் உபந்நியாசமும் நடைபெறுகிறது.

### காதல் ஜாக்கிரதை!

கொழும்பு ஜூட்டிங்ஸ்டார் விளையாட்டுக் கழக நிதிக்காக சிலோன் சேவா ஸ்டேஜின் 'காதல் ஜாக்கிரதை' எனும் நாடகம் 26.8.72 மாலை 6.30 மணிக்கு வெள்ளவத்தை சரசுவதி மண்டபத்தில் மேடையேறுகிறது. நுழைவிதழ்களை பம்பலப்பிட்டி கிறீன்லண்ட்சிலும் சரஸ்வதி மண்டபத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

### உச்சவரம்பு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

குள்ளே இலஞ்சம்— ஊழல் முதலியவற்றைப் பெறக் கூடியதாக ஒரு நிருவாகத்தை உருவாக்கி நடத்துவதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சவரம்பு நிலத்துக்கு மட்டும் தானா?

# மிச்ச செல்வங்களுக்கு கட்டுப்பாடு ஏன் இல்லை?

## சோசலிசத்தின் எதிரி கம்பெனிகள்!

### அவற்றினூடாகத் தப்பி விட்டன பெருச்சாளிகள்!!

பிரதிச்சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்ட மூலத்தைப் பற்றி எமது கருத்தைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக, காணிகளுக்கு உச்சவரம்பு விதிப்பது பற்றி நாம் மிகவும் சந்தோஷம் அடைகின்றோம். அந்தக் கொள்கையை வரவேற்கின்றோம். இந்தச் சபையிலும் இதற்கு முன்னிருந்த பாராளுமன்றத்திலும் சோசலிசத்தைப் பற்றியும் பொருள் உடைமை பற்றியும் நாம் எடுத்துச்சொன்ன கருத்துக்களிலே கமக்காணிகளுக்கு மட்டுமன்றி சகல காணிகளுக்கும் உச்சவரம்பு இருக்க வேண்டுமென்றும் அதற்கும் மேலாக எல்லா வகையான செல்வங்களுக்கும் உச்சவரம்பு இருக்க வேண்டுமென்றும் எந்த வித விதிவிலக்குமில்லாமல் எடுத்துரைத்தோம்.

இந்நாட்டிலே சோசலிசத்தை உருவாக்க வேண்டுமென்றால் ஒருவகைப்பட்ட காணிகளுக்கு மட்டும் உச்சவரம்புவிதித்தாற்போதாது மக்கள் தங்கள் செல்வத்தைப் பல வகைகளிலே சேர்த்து வைத்திருக்கிறார்கள். காணிகளிலே — நெற்காணிகளிலும் வேறு கமக்காணிகளிலும் — சேர்த்து வைத்திருக்கிறார்கள். கம்பனிகளிலும் கம்பனிப் பங்குகளிலும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். வைரக் கற்களிலும், நகைகளிலும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். மக்கள் செல்வத்தைச் சேர்ப்பது தங்கள் வசதிக்கும் ஆசைக்கும் ஏற்பவாகும். எனவே, இந்நாட்டிலே சோசலிசம் என்ற ஒரு புதிய கொள்கையை நாம் உருவாக்க வேண்டுமானால் எல்லா வகையான செல்வத்துக்கும் உச்சவரம்பு இருக்க வேண்டுமென்பதுதான் எங்கள் அடிப்படைக் கொள்கை. தனியே காணிகளுக்கு — கமக்காணிகளுக்கு — மட்டும் இந்த உச்சவரம்பு அமைந்ததாக இருக்கக் கூடாது.

### பெருச்சாளிகள் தப்பிவிட இடமளிப்பதா?

நான் எடுத்துச் சொன்ன கருத்தின் அடிப்படையில் — சோசலிசத்தின் அடிப்படையில் — ஒரு சிறிய அளவேனும் ஓர் அங்குலமேனும் இந்தச் சட்ட மூலம் முன்னேறியிருப்பதைப்பற்றி சந்தோஷந்தான் தெரிவிக்க வேண்டும்.

கமக் காணிகளுக்கு உச்சவரம்பு விதிப்பதை நாம் வரவேற்கின்றோம். எதுவித தயக்கமோ, தடையோ, தயவு தாட்சண்யமோ, நிபந்தனையோ, விதிவிலக்கோ இன்றி நாம் இதனை வரவேற்கின்றோம். ஆனால் இந்தச் சட்ட மூலத்தைச் சமர்ப்பிக்க ஏன் இவ்வளவு காலம் ஆனது என்பதுபற்றி ஆலோசிக்கும் பொழுது எமக்குச் சந்தேகம் எழுகின்றது.

தாமரைப்பூ வேண்டுமென்று கேட்ட நேரத்திலே பூ பறிக்கப் போனவர் நீண்டநாள் கழித்து வரும் பொழுது பூவோடு சேற்றையும் அள்ளிக் கொண்டு வந்தார். அது போலத்தான் இந்தச் சட்டமூலமும் அமைந்திருக்கின்றது. காணிக்கு உச்சவரம்பு வேண்டுமென்று அரசாங்கம் சொல்ல, செல்வத்துக்கும் உச்சவரம்பு வேண்டுமென்று நாம் சொல்ல, எல்லா வகையான செல்வத்துக்கும் காணிக்கும் உச்சவரம்பு வேண்டுமென்று நாடு முழுவதும் சொல்ல, சோசலிச அடிப்படையில் இயங்கச் சம்மதமிருந்தும் இவ்வளவு காலத்துக்குப் பின்னர் இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்படுகின்றது. இந்த இடைக்காலத்தில் இந்தச் சங்கடத்திலிருந்து தப்பித்துக் கொள்ள எவரெவர் எந்தெந்த முறைகளைக் கையாண்டார்களோ தெரியாது. அத்தகைய பெருச்சாளிகள் தப்பிப்போக இதிலே இடம் இருக்கின்றதென்பதை நாம் காண்கின்றோம்.

காணிகளுக்கு உச்சவரம்பு விதித்ததன் பின் அடுத்து அரசாங்கம் என்ன செய்

காணிச் சீர்திருத்த ஆணைக் குழு ஏன் மேற்கொள்ள வேண்டுமென்பதுதான்.

ஒருசதம்கூட செலவில்லாமல் இந்த உச்ச வரம்பைச் சட்டப்படி ஆக்கி, மக்களே தங்களுடைய காணிகளின் எல்லையை—உச்ச வரம்பைத் தாங்களே அமைத்து தங்கள் தேவைக்கு மேலதிகமாக இருக்கின்ற காணிகளை மற்றவர்களுக்குக் கொடுத்து, சோசலிசத்தை இந்த உச்சவரம்பு அடிப்படையிலே உருவாக்குவதற்கு, மக்களுடைய பங்கை-மக்களுடைய இயக்கத்தை உருவாக்குவதே முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும். ஆகவே, ஒரு சதம்கூடச் செலவில்லாமல் செய்யக்கூடிய ஒரு வேலையை, ஒரு கோடி ரூபாய் செலவு செய்து அதற்கு மேலும்



முன் ஒருமுறை, முந்திய சபையிலே மூலதனவரி பற்றி நாம் பேசும் பொழுது அங்கும் கம்பனிகளை உருவாக்கித் தருவதற்கு இடம் கொடுத்தீர்கள் என்பதை எடுத்துக்காட்டினோம். ஒரு சோசலிச அரசாங்கம் என்று சொல்லிக் கொண்டு எங்களுடைய நாட்டிலே இருக்கிற தனியார் சிலரைப் பிடித்துக்கொண்டு தப்பியோடிய தனியார் சிலரை வைத்துக்கொண்டு கம்பனிகள் என்ற பெயரிலே அவர்களுக்குச் சகாயம் செய்யக்கூடிய முறையிலே நடக்கக்கூடாது. அவர்கள் அன்றைக்கும் தப்பினார்கள். இன்றைக்கும் தப்புகிறார்கள். நிறையக்காணி உள்ளவர்கள் கம்பனிகளிலே தங்களுடைய காணிகளைச் சேர்த்துவிட்டால், ஒரு பிரசித்த கம்பனி 5,000 3,000 ஏக்கர் காணியுடைய இரண்டு, மூன்று பேர்களைப் பங்காளர்களாகச் சேர்த்து விட்டால் அவர்கள் தப்பிக் கொள்கிறார்கள். இதுவா சோசலிசம்? இதுவா உங்களுடைய சோசலிசம்?

### உண்மையான சோசலிசம் உருவாகவேண்டும்

கம்பனிகள் தாம் முதலில் சோசலிசத்துக்கு பாறாக நிற்கின்றன. அவற்றினுடைய ஏகபோகம் தான் சோசலிசத்துக்கு மாறாக நிற்கின்றன. கம்பனிகளுடைய உருவிலே தப்புகிற தனியார்களுக்கு இடம் கொடுத்து விட்டு என்னவென்று சோசலிசத்தை இந்த நாட்டிலே உருவாக்கப் போகிறீர்கள்? இந்த விதிவிலக்கிலே நீங்கள்

இந்நாட்டிலே காணிகளுக்கு ஓர் உச்சவரம்பு கொண்டுவரப் போகின்றோம் என்று நீங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கின்றீர்கள். அந்தக் கருத்தை ஏற்றுப் பலர் தங்கள் காணிகளை மற்றவர்களுக்கு விற்றிருக்கிறார்கள். உங்களது கொள்கையை ஏற்று அவ்விதம் செய்திருக்கிறார்கள். "உச்சவரம்பு நல்லது., என்னிடம் ஐம்பது ஏக்கர் இருக்கின்றது, நான் ஐம்பது ஏக்கரை வைத்திருக்கக்கூடாது. அரசாங்கத்தின் கொள்கையும் அதுதான், ஆனபடியால் இருபத்தைந்து ஏக்கரை இன்னொருவருக்குக் கொடுக்கின்றேன்" என்று அவ்விதம் காணிகளைக் கொடுத்திருக்கின்றார்கள். அப்படிக் கொடுத்தவர்களை சுற்றிலே பிடிக்கப் பார்க்கின்றீர்கள்.

உங்கள் கொள்கையை ஏற்றும், தாங்களாகவே சோசலிசத்தை ஏற்றும், இருபத்தைந்து ஏக்கருக்கு மேல் வைத்திருக்கக்கூடாது என்று தாங்களாகவே தீர்மானித்துத் தங்கள் காணிகளை மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் கம்பனிகளில் சேர்ந்தவர்கள் தப்பிக் கொண்டார்கள்; அதாவது தங்கள் காணிகளை Public Company களுக்குக் கொடுத்தவர்கள் தப்பிக் கொண்டார்கள். எனவே ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்.

## நிலச் சீர்திருத்த மசோதாமீது கோப்பாய் பா. உ. பேச்சு!

கின்றது? காணிச் சீர்திருத்த ஆணைக்குழு என்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலம் விஷயங்களைச் செய்ய இந்தச் சட்டமூலத்தின் மூலம் உத்தேசிக்கப்படுகின்றதென்பதைக் காண்கின்றோம். எங்கள் முதற் கேள்வி என்னவென்றால், காணிக்கு உச்சவரம்பு விதிக்கும் பொழுது காணிச் சீர்திருத்தக் குழுவுக்கு என்ன வேலை? அந்தக் குழு ஏன் இருக்க வேண்டும்?

### ஆணைக் குழு அவசியமா?

சோசலிசம் என்று சொல்லுகின்றபொழுது— காணிக்கு உச்ச வரம்பு வைக்கின்றபொழுது— அந்த உச்ச வரம்பை வைத்து மக்களே தங்களுடைய காணிகளை அந்த உச்சவரம்புக் குட்பட வைத்துக்கொள்வதற்குச் சட்டம் ஆக்கினால்

காலத்துக்குக் காலம் செலவுக்கென இச்சபையின் மூலம் பணம் கேட்பது எதற்காக என்பதுதான் எங்கள் கேள்வியாகும்.

### இதுவா சோசலிசம்?

சோசலிசம் என்று சொல்கிற முறையிலே இந்தத்திட்டம் உற்பத்தியைப் பெருக்கும் என்பதற்காக நீங்கள் இதைக் கொண்டு வந்தீர்கள் என்று எங்களால் சொல்லமுடியாது. உற்பத்தியைப் பெருக்குகிற விஷயம் சோசலிசம் அல்ல; கம்பியூனிசமும் அல்ல; உற்பத்தி முறைகளினாலேதான் உற்பத்தி பெருகுகிறது. அமெரிக்காவிலே இருபது வீத மக்கள் கமத்தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்காவுக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்வதுமல்லாமல் ரஷியாவுக்கும் ஏற்றுமதி

இருபத்தைந்து ஏக்கருக்கு மேல் சொந்தமாக இருக்கக் கூடாதென்பது சட்டம்; இங்கே 'சொந்தம்' என்பது என்னவென்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் ஒருவன் தனது காணிகளை இருபத்தைந்து ஏக்கர் வீதம் பத்துப் பதினைந்து பேருக்குக் கொடுத்து அதன் நலன் தனக்கிருக்க வேண்டும் என்று எழுதி வைத்தால் அதற்கு சட்டம் யாதாக இல்லை. உங்கள் 'சொந்தம்' என்ற கருத்து 'beneficial interest' என்ற கருத்தைப் பிடிக்கவில்லை.

### சகல செல்வங்களுக்குப் உச்சவரம்பு வேண்டும்

இந்தச் சட்ட மூலத்தின் அடிப்படைக் கொள்கையை நாங்கள் ஏற்கின்றோம்—வரவேற்கின்றோம். அதைமீண்

## காணிச் சீர்திருத்த ஆணைக் குழு ஏன்? அதற்கு கோடிக்கணக்கான ரூபாவைக் கொட்டுவான் ஏன்?

போதும். அதற்குமேல் அந்தக் காணிகளை இப்படி ஒரு காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவை வைத்து அந்த நிறுவனத்தின் மூலம் எஞ்சிய, மிஞ்சிய காணிகளையும் எடுத்துக் கையாளுகின்ற வேலை எதற்கு என்பதுதான் எங்களுடைய கேள்வி.

இந்தச் சட்ட மூலத்தின் ஒரு முக்கிய அம்சமாக இந்தக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு இருப்பதை நீங்கள் இங்கேபார்க்கின்றீர்கள் அதை நடாத்துவதற்கு முதற்படியாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. காலத்துக்காலம் அமைச்சரவர்கள் இச்சபைக்கு வந்து இந்தக் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு வேண்டிய பணத்தை ஒதுக்கிடும் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் கேட்கலாம்.

நான் உங்களைக் கேட்பதென்னவென்றால், காணிச் சொந்தக்காரர்கள் இதுவரை காலமும் காணியை நிருவகித்த செலவு அவர்களோடு இருக்கிறது; ஆனால் மேற்பட்ட ஒரு [illegible] ஏற்படுத்தும் வேலையை

செய்கிறார்கள். ஆதலினாலே நாங்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்காகச் சோசலிசத்தைக் கொண்டுவரவில்லை. சமுதாயத்திலே நீதி இருப்பதற்காகத்தான் சோசலிசத்தைக் கொண்டு வருகிறோம் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் தங்களுடைய காணியிலே வேலை வாய்ப்புப் பெற்று, நிறைவு பெற்ற மக்களாக வாழ வேண்டும். காணி செய்பவன் காணிக்குச் சொந்தக்காரனாக இருக்க வேண்டும். இதற்காகத்தான் சோசலிசமே யொழிய உற்பத்தியைப் பெருக்குவதற்காக அல்ல.

நீங்கள் உச்ச வரம்பை சோசலிசம் என்ற அடிப்படையிலே கொண்டு வந்தாலும், அதற்கு பிரசித்த கம்பனிகளை விதி விலக்காக வைத்திருந்தாலும் அது சோசலிசம் அல்லாமல் எங்களுடைய சண்டனத்துக்கு அமைந்தாலும் நீங்கள் மிக முக்கிய [illegible] வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

என்ன செய்கிறீர்கள் என்றால், கெட்டிக்காரத் தனியாரை, கெட்டிக்காரப் பெருச்சாளிகளை கம்பனிகளுக்குள் போய்த் தப்புவதற்கு வழி கொடுக்கிறீர்கள். அப்படிக் கெட்டிக்காரத்தனம் இல்லாதவர்கள் அகப்பட்டுக்கொள்கிறார்கள். இதுதான் உங்களுடைய சோசலிசமாக இருக்கின்றது. உண்மையான சோசலிசத்தை இந்நாட்டிலே உருவாக்க வேண்டுமென்றால் இந்த நிலையை முற்றாக மாற்ற வேண்டும்.

டும் எந்த விதமான தயக்கமுமின்றி நாங்கள் ஏற்கிறோம். காணிக்கு உச்சவரம்பு இருக்கவேண்டும்; அதுபோல கமக் காணிக்கு மட்டுமல்ல, சகல காணிகளுக்கும்— சகல செல்வங்களுக்கும் உச்ச வரம்பு இருக்கவேண்டும். அதுதான் உண்மையான சோசலிசம். ஆனால் நீங்கள், தப்புகிறவர்களைத் தப்ப வைத்துவிட்டு, அகப்படுகிறவர்களை அகப்படப்பண்ணி ஒரு கமிஷனை வைத்து அந்த கமிஷனுக்

(4ம் [illegible] பக்கம் பார்க்க)

மில்க்வைற் சோப் விற்பனையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

மில்க்வைற்சோப் பாவனையாளர்கள் எமது பரிசுத்திட்டத்தில் அதிக ஆர்வத்துடன் பங்குபற்ற வேண்டியிருப்பதால், தயவுசெய்து உங்கள் வாடிக்கையாளர்களுக்கு மில்க்வைற் சோப் விற்பனை செய்யும்பொழுது அவற்றின் மேலுறைகளுடன் விற்பனை செய்யுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அதிபர்,

மில்க் வைற்சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியர்கள் தனியொரு தேசியஇனமல்ல-
# தமிழ்த் தேசியஇனத்தின் ஒருமுக்கிய அங்கமே!

## மதத்தைவிட மொழியே உயர்ந்தது!
### இந்த உண்மையை இஸ்லாமியர் உணர வேண்டும்!

விடுதலை என்பது நினைத்த நேரத்தில் பெற்றுக்கொள்ளும் கடைச்சரக்கல்ல. சுதந்திரதேவியின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல லட்சோப லட்ச மக்களைப் பலியிட்டு — பல நூற்றுண்டுகள் சளைக்காமல் தொடர்ந்து போராடுவதன் மூலம்தான் விடுதலைக்கனியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை விடுதலை அடைந்த நாடுகள் பலவற்றிலிருந்து நாம் பார்க்கின்றோம்.

அயர்லாந்து, அல்ஜீரியா, அமெரிக்கா, ஆபிரிக்காக் கண்டம், இந்திய உபகண்டம்—யூத இனம் போன்ற பல்வேறு நாடுகளும்—இனங்களும் அடக்குமுறைகளை உடைத்தெறிய பல லட்சம் கல்லறைகளைக் காணிக்கையாக்கித்தான் விடுதலை கண்டன —ஆனால் இங்கு நாம் எத்தனை நூற்றுண்டுகள் போராடியிருக்கின்றோம் — எத்தனை லட்சம் கல்லறைகளைக் கட்டியிருக்கின்றோம்?

### முஸ்லிம் பெருங்குடி மக்களின் உணர்ச்சியற்ற தலைவர்கள்

இந்நிலையில் கலை, கலாச்சாரம், நாகரீகம், சரித்திரம் ஆகியன கொண்டு தமிழ் தேசிய இனத்துடன் எட்டு நூற்றுண்டுகளுக்கு முன்பே ஒன்றித்திணைந்துவிட்ட முஸ்லிம் பெரும்குடி மக்கள்—காலம் நேரம் தெரியாது தங்களைத் தனி ஒரு தேசிய இனமாகக் கற்பனை செய்துகொண்டு — மொழி உரிமைப் போராட்டத்தில் ஏனோ தானோவென்று வாழ நினைப்பது தனக்குத் தானே சவக்குழி தோண்டிக்கொள்கின்றுர்கள் என்றுதான் பொருளாகின்றது.

ஒரவஞ்சனையும் ஒழிக— தமிழ்பேசும் மக்கள் என்ற குறுகிய குணமும் கொண்ட வர்கள் தெருப்பொருளாகிவிட்ட தனிச்சிங்கள ஆட்சியிலே தமிழ்பேசும் மக்களுக்கு வாழ்வோ — விமோசனமோ கிடைக்கமுடியாது என்பதைக் கடந்தகால அரசியலிலே இருந்து மட்டுமல்ல— அண்மையில் பிரகடனப்படுத்திய குடியரசு மூலமாகவும் தெளிவாகத் தெரிந்துகொண்டோம்.

அரக்கத்தனமான பல்வேறு உருவங்களில் ஒரு தேசிய இனத்தின் மகத்துவமிக்க உரிமைகளை சூறையாடிக்கொண்டிருக்கும் சிங்கள அரசின் செல்லப்பிள்ளையாக வளர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கும் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் அச்சமுதாயத்திற்கு ஒரு வெடிமலையாகவே இருந்துவருகின்றனர்.

### தலைவன் என்றாலும் முடிவு ஒன்றுதான்

பல கோடி மக்களால் அன்று போற்றிப் புகழப்பட்ட அபுல்கலாம் ஆசாத் அவர்கள் விடுதலைப் போராட்டம் நடத்திய இந்திய உபகண்ட முஸ்லிம்களின் அரசியல் உணர்ச்சிகளுக்கு மாறாகத் தலைவன் என்ற இறுமாப்போடு தனிவழி நடக்க எண்ணியதால்தான் அவருக்கு மாலையிட்ட கைகள் மண்ணை வரித் திட்டின. வாழ்க, எம் தியாகி என்று துதிபாடிய வாய்கள்—ஒழிக, துரோகி எனத் தூற்றின. ஏன்—புனித தொழுகையில்கூட அவரின் தலைமையை நிராகரித்துவிட்டனர்.

அதேபோன்று எகிப்திய மன்னர் பாரூக், சாம்ராஜ்ய மன்னர் இபுறாகீம் போன்ற பல மன்னாதி மன்னர்களெல்லாம் தங்களின் தலைக்கனத்தால் மக்களிடமிருந்து துக்கபாடம் பெற்றிருக்கின்றனர்.

இப்படி எதையும் சரியான நேரத்தில் இன உணர்ச்சியோடு செயல்படச் சிந்திக்கும் ஆற்றலும் — திறனும் கொண்டவர்கள்தான் இஸ்லாமிய பெருங்குடி மக்கள். பதவி வெறியும் —பண ஆசையுமே தஞ்சமெனக்கொண்டு சிங்கள அரசின் பாதம் வணங்கி நிற்கும் மதிப்புக்குரிய எதிர்ப்புக்குள்ள தலைவர்கள் நல்லவர்களாக— உணர்ச்சியுள்ளவர்களாக வேண்டும். பதவி வெறி தலைக்கேறிய பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும்

## கே. எஸ். ஏ. கபூர்

இன்று வேட்டைக்காடாக இருந்து வரும் ஒரே இனம் இஸ்லாமிய இனம் மட்டும்தான் என்பதை மறுக்கவே முடியாது.

தனிச்சிங்கள வெறி ஆட்சியின் அடக்குமுறைகளை உடைத்தெறிய தமிழ்தேசிய அரசியல் கட்சிகளெல்லாம் ஒன்றுபட்டு வேகமாகச் செயல்பட்டு வரும்போது —யார் செய்த பாபமோ— இஸ்லாமிய இனம் மட்டும் உருட்டிவிட்ட நெல்லிக்கனி போன்று சிதறிச் சின்னபின்னப்பட்டுக்கிடக்கின்றது.

திற்கும் — சரித்திரத்திற்கும் — மனச்சாட்சிக்கும் மாறாக ஒரு மண் கோட்டையைக் கட்டி விட்டிருக்கின்றனர். எனவே கிணற்று நீர் ஊற்றி வளர்க்கப்பட்ட மரத்திற்கு மழை நீர் உதவாது என்பதைப் போன்றதுதான் அவர்களது வாதம்.

தாய்மொழி தமிழல்ல என்று கூறும் இவர்கள் தத்துவ ரீதியாக வேற்று மொழியில் சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்களாகத்தான் இருக்கின்றுர்கள். ஆனுல்— எம்தாய்மொழி தமிழ்தான் என்று திட்ட வட்டமாக நாம் சொல்கின்ற போது அதைப் பலகோணங்களில் நின்று விவாதிக்கலாம். பெற்றெடுத்த எம்முடைய தாய் நம்மைத் தாலாட்டிச் சீராட்டி எந்தமொழியால் அழைத்துப் பாலூட்டுகின்றுளோ, அதுவே எமக்குத் தாய்மொழியாக அமைந்துவிடுகின்றது என்று மொழி வல்லுனர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர். தாய் எப்படி எமக்குத் தெய்வமோ— அதே போன்றுதான் தாய் கற்றுத்தந்த மொழியும் நம்மை உலகோடு இணைக்கும் ஒரு தெய்வக் கருவியாக மொழி உருவில் அமைந்திருக்கின்றது.

உலகில் இன்று "125 நாடுகளுக்குமேல் இஸ்லாமிய இனம் பரந்து விரிந்து வாழ்கின்றது. ஆனுல் அங்கெல்லாம் வாழும் முஸ்லிம்கள் ஆட்சியாளர்கள் சொன்னுல், அதைச் சரி என்று ஏற்றுக்கொள்ள நம்மில் எத்தனைபேர் இருக்கின்றோம் எனவே உலகமுஸ்லிம்களுக்கு அராபி ஒரு பொது மொழியாக வணக்கத்துக்குரிய மொழியாக இருக்கலாம். ஆனுல் உலகமுஸ்லிம்களுக்கு அது தாய் மொழியாகிவிட முடியாது. கிறிஸ்துவ மக்களின் பொது மொழியான 'லத்தீன்' அவர்களுக்குத் தாய்மொழியாகிவிடவில்லை. சைவ மக்களின் சமஸ்கிருதம் அவர்களுக்குத் தாய் மொழியாகவில்லை. அதே நிலைதான் அராபிய மொழிக்கும்.

### மத உணர்ச்சிக்கு மேலோங்கியது தேசிய இன உணர்வு

சிங்கள மொழிக்குரிய மொத்த மக்களின் தொகையில் சுமார் 70 லட்சம் பௌத்த மக்களும், 35 லட்சம் கிறிஸ்துவ மக்களும் உள்ளடங்கியே ஒரு பெரும் தேசிய இனமாகக் கலை கலாச்சாரத்தில் ஒன்றிணைந்து வாழுகின்றுர்கள். அவர்களுக்குள் எவ்வளவுதான் மத வேறுபாடுகள் இருந்தாலும் ஒரே இனம் என்ற உணர்வுதான் அவர்களின் உள்ளங்களில் மேலோங்கி நிற்கின்றது.

மொழி, நாகரீகம், பூகோள அமைப்பு, அரசியல் உணர்ச்சி, ஒன்றுபட்ட சரித்திரத் தொடர்பு ஆகியவை

## தமிழைக் காத்திடும் போரில் குதிக்க இஸ்லாமிய இளைஞர்களே தயாராவீர்!

பல்வேறு அரசியல் கட்சிகளால் தம்மிச்சையாகப் பங்கு போடப்பட்டு—தனக்கென ஒரு பொது அரசியல் கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாதவர்களாக முஸ்லிம்கள் அரசியலில் அநாதையாக்கப்பட்டிருக்கின்றனர்.

தென்னிலங்கையில் வாழக்கூடிய முஸ்லிம்களுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழக்கூடிய முஸ்லிம்களை மொழிப் பிரச்சினையில் பிடிப்பதில்லை. வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்குத் தென் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களை அரசியல் கொள்கையில் பிடிப்பதில்லை. இப்படி இரு துருவங்களாக ஒரு சமுதாயத்தைச் சிலர் தம் அரசியல் லாபத்திற்காகப் பங்கு போட்டு வைத்திருக்கின்றனர்.

மக்களுக்கு நிழல் தரும் என்று நினைத்து நாட்டப்பட்ட மரங்களெல்லாம் நாளடைவில் நச்சுச்செடிகளாக மாறி — உதட்டைப் பொசுக்கிக் குடலைக் கருக்கிடும் கொடிய விசக்கனிகளைக் கொத்துக்கொத்தாகத் தந்திருக்கின்றது. இதற்குப் பிறகும் எம் மக்கள் அம்மரத்தில் மீண்டும் நல்ல கனிகளைப்பெற்றுத் தம் பசியைப் போக்கிக் கொள்ள முடியும் என்று நினைப்பது வடிகட்டிய அறியாமையாகும்.

### எமது தாய்மொழியில் கற்பனை விவாதம்

கடந்த சில காலங்களாகச் சிலர் — முஸ்லிம்களின் தாய் மொழி தமிழல்ல — அராபிய மொழியே என்று விவாதத் தங்களை அராபியர்கள் என்று சொல்லிக்கொள்ளவில்லை. அராபிதான் எங்கள் தாய்மொழி என்ற வீண் பிரச்சினையையும் அவர்கள் கிளப்பவில்லை. அதேபோன்று அந்தந்த நாடுகளில் அவர்கள் பேசக்கூடிய —தாய்மொழி என ஒப்புக்கொண்டுவிட்ட மொழியின் இன்ப—துன்பங்களில் பங்குகொள்ள மறுக்கவுமில்லை— ஒதுங்கவுமில்லை. மத்திய கிழக்கிலே உள்ள சுமார் 17" நாடுகளைத் தவிர, வேறு எந்த நாட்டிலுமே முஸ்லிம்களுக்கு அராபி தாய்மொழியாக இல்லை.

### இப்போது என்ன சொல்லப் போகின்றுர்கள்?

அதிலும், இவர்கள் கருத்துப்படி நாம் பார்க்கின்றபோது இஸ்லாத்திற்குப் பிறப்பிடமான மத்தியகிழக்கிலிருந்துதான் பல லட்சம் பக்கள் வெளியேறி — பல்வேறு இடங்களுக்கும் சென்று (அரேபியர்கள்) குடியேறினர்கள் என்றால், வேற்றுமொழி பேசக்கூடிய மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதல்லவா கருத்தாகின்றது. உதாரணமாக — இலங்கை முஸ்லிம்களின் மூதாதையர்கள் அராபியர்களாக இருந்தால் அன்று இலங்கையில் யாரேனும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவில்லையா?

ஏன் — நாம் அராபியாவிலிருந்து வந்தவர்களாக இருக்கின்றோம் என்று நாமே சொல்லிக்கொள்ளும் அதே நேரத்தில் — மலைநாட்டுத் தமிழரை, ஒருநிமிடமே வெளியேறு என்று சொல்வதைப் போன்று — நம்மையும் அராபியாவில் குடியேறும்படி கள் ஒன்றுசேர்ந்தால் — அவர்கள் எத்தனை பெரிய மத வேறுபாடுகளைக் கொண்டவர்களாக இருந்தாலும் பிரிக்க முடியாத — ஒன்றிப் பிணைந்த தேசிய இனத்தைச் சார்ந்தவர்களாகி விடுகின்றுர்கள் என்பதுதான் அரசியல் சாணக்கியர்களின் ஆணித்தரமான கருத்தாகும். இதன் அடிப்படையிலே நாம் உண்மையைச் சிந்திக்கின்றபோது — தமிழ்பேசும் சைவ, கிறிஸ்துவ, முஸ்லிம்கள் எவ்வளவு பெரிய சக்தியுடன் ஒரே தேசிய இனமாக உள்ளடங்கி இருக்கின்றுர்கள் என்பதை எவராலும் மறைக்க முடியாது.

ஒரு மதத்திற்கில்லாத மிகப் பெரும் சக்தி — ஒரு தேசிய இனத்தை உருவாக்கும் கருவுக்குத்தான் இயற்கையாக அமையப்பெற்றிருக்கின்றது. அதனுல் மத ஒற்றுமைக்கும், உணர்வுக்கும் அப்பால் மொழி போன்ற சில அடிப்படை அமைப்புக்கள் ஒன்றிணைந்த தேசிய இன உணர்ச்சியைப் படைத்து விடுகின்றன.

### ஓர் இறைத்தின், சக்தி உள்ள மொழிப்பற்று

1.956ம் ஆண்டு சுயஸ்கால்வாய் தேசிய மயமாக்கப்பட்ட போது பிரிட்டனும், பிரான்சும் கூட்டாக எகிப்தைத் தாக்கியதை எம்மில் யாருமே மறந்திருக்க முடியாது. அப்போது நடந்த இந்த யுத்தத்தில், எகிப்திய சிறுபான்மைக் கத்தோலிக்க மக்களும் இரத்தத்தால் கையெழுத்திட்டுப் போர்க்களம் நோக்கி விரைந்தார்கள் என்பதை நாம் அறிந்தோம்.

(7-ம் பக்கம் பார்க்க)

## எமதுரிமை கேட்போம்!

— மருதூர்வாணன் —

இந்நாட்டின் முஸ்லீம்கள் எப்பக்கம் சார்ந்துளீர்?
இங்குள்ள தலைவர்கள் எமக்குரிமை கேட்டனரா
செந்தமிழைப் பேசுகின்ற செப்பத்தைப் பாரும்,
சொல்வதெலாம் சோசலிசம் சமதர்மமாமே,
எந்தமிழர் விடுதலைக்கு எள்ளளவும் உதவாயல்
அரசினர்க்கு வால்பிடித்து அடிமைகளாய்
— வாழ்கின்றீர்
சிந்திக்க வேண்டுகிறேன் சிறுக்குத் தலைவர்களை
சகோதரத் தமிழருக்கு சாட்டையடி இன்றென்றால்...

இந்நாட்டில் வாழ்கின்ற
எட்டு லெட்சம் முஸ்லீம்காள்
எப்படியும் நாளைக்கு
இவ்வரசால் மிதிபடுவீர்!

*

சிங்களவர் எங்களுக்குச் சரிநிகர் தோழர்தான்
சிந்தித்துச் சோசலிசச் சட்டத்தை இயற்றுமல்
தங்களுக்குச் சாதகமாய்த் தனிப்பௌத்த நாடாக
தரணிக்குக் குடியரசாய்த் தற்பெருமை யடிப்பதுவோ?
உங்களுடைய சோசலிசம் உலகமிதை ஏற்றிடுமோ?
உரிமையில சேட்டிங்கு எந்தமிழர் மாளுவதோ!
சங்கையிலாச் சிலதமிழர் சிங்களவர் திண்ணையிலே
சோற்றுக்கும் பதவிக்குச் சரண்டியடி பணிகின்றுர்

எங்களுடை முஸ்லீம்களே,
எப்பொழுதும் பதவாதீர் —
எச்சிலிலைப் பதவிகள் நிலையா
எமதுரிமை கேட்டிருப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(22)



## தங்க வங்கமும் தங்க ஈழமும்!

# அண்ணாவின் தமிழ்நாடு கண்டேன்

கோவை-மகேசன்

"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் — திருநீல கண்டத்துக்குயவனுர்க்கடியேன்" — என்று திருத்தொண்டர் தொகைபாடினுர் சைவம் வளர்த்த நால்வரில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனுர். இதே போல 'தரணியில் எங்கு வாழ்ந்திடினும், தமிழுக்கு தொண்டு செய்யும் அடியார் எவருக்குமடியேன்' என்று கவிதை பாடாவிட்டாலும் செயல் மூலம் அமைதியாக அதைக் கடைப்பிடித்து வருகிருர் சென்னையில் வாழும் ஒருவர். அவர் பெயரே அடியார். அவரே 'முரசொலி' அடியார்.

கலைஞர் கருணநிதியின் 'முரசொலி' நல்ல பல எழுத்தாளர்களை உருவாக்கி தமிழ் நாட்டில் உலாவவிட்டிருக்கிறது. இப்பொழுதும் முரசொலியில் திறமைமிக்க எழுத்தாளர்கள் பலர் பணிபுரிந்து வருகின்றனர். பாண்டியன், வெங்கடாசலம், முதியவர் சங்கரய்யா, மணிமொழி, வலம்புரி ஜான், போன்ற பல நண்பர்கள் முரசொலிக் குடும்பத்தில் பணியாற்றுகின்றனர். இவர்கள் மத்தியில் உதய சூரியன் போல விளங்குபவர்தான் 'முரசொலி' அடியார்.

நான் 'முரசொலி' அலுவலகத்துக்கு சென்றபோதெல்லாம், அங்குள்ள நண்பர்கள் காட்டிய பரிவும் பாசமும் என்னை மெய் மறக்கச் செய்திருக்கிறது. 'முரசொலி' அலுவலகத்தில் நான் இருக்கும் போது ஏதோ புதிய இடத்தில் இருப்பதாக எனக்குத் தோன்றியதில்லை. அந்த அளவுக்கு முரசொலி நண்பர்கள் என்னுடன் குடும்ப பாசத்துடன் பழகினர். நம்முடைய கவிஞர் காசி ஆனந்தனைப் பற்றி மெத்த ஆவத்துடன் விசாரித்தனர்.

நண்பர் அடியார் அவர்களைப் பார்க்கும்போது ஆள் கொஞ்சம் முரடரோ என்றுதான் எண்ணத்தோன்றும்; ஆனுல் அவருடன் சிறிது நேரம் பழகிவிட்டாலோ அவரது உள்ளம் எத்தனை உயர்ந்தது; எவ்வளவு கனிந்தது என்பது தெரியவந்துவிடும்.

அடியார் அவர்கள், தி. மு. கழகத்துக்கு எதிராக மாற்ருர் நடத்தும் பொய்ப் பிரச்சாரங்களை அன்ருடம் தன்னுடையபேனுமுனையால் சுக்குநூருக உடைத்தெறியும் ஓர் எழுத்தாளர் மட்டுமல்ல; அரசியல் பிரச்சினைகளை தத்துவரீதியாக எழுதக்கூடிய ஓர் தத்துவ எழுத்தாளர் மட்டுமல்ல — அவர் ஓர் நாடக எழுத்தாளர், தயாரிப்பாளரும்கூட!

ஆம், அவரது கைவண்ணத்தில் உருவான இரண்டு நாடகங்களை காணுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒன்றை 1971 தேர்தல் சமயத்தில் பார்த்தேன். மற்ருென்றை இந்த ஆண்டு பெப்ரவரியில் பார்த்தேன்.

இரண்டாவது நாடகமான 'தங்கவங்கம்' தந்தை செல்வா தலைமையில் நடைபெற்றது. முதலாவது நாடகமான 'நானே அறிவாளி' அண்ணன் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

1971ம் ஆண்டு பொதுத் தேர்தல் சமயம், திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் தமிழ் நாட்டுக்கு சென்றிருந்தபோது, சென்னை சிங்கண்ண செட்டித்தெருவில் நடைபெற்ற தி. மு. கழகப் பிரச்சார நாடகமாகிய 'நானே அறிவாளி' நாடகத்துக்கு அமிர் அண்ணன் தலைமை தாங்கவேண்டுமென்று அடியார் அவர்கள் விரும்பினுர்கள். அந்த விருப்பத்தை பூர்த்திசெய்தோம்.

தி. மு. கழகத்துக்கு மாருக எதிர்க்கட்சியினர் நடத்தி வந்த பிரச்சாரங்களுக்கு சவுக்கடி கொடுப்பதுபோல அமைந்திருந்த அந்த நாடகம், கழகத்தின் கொள்கைகளை எடுத்து விளக்குவதாகவும் இருந்தது. அந்த நாடகத்தில் தமிழ் அன்னையாகத் தோன்றி உணர்ச்சி பொங்கும் வீர வசனங்களைப்பேசி நடித்த நடிகை சகுந்தலாவின் நடிப்பு இப்போதும் கண்ணுக்குள் நிற்கிறது.

இந்த நாடகத்தினைப் பார்த்ததால் நமக்கு மற்ருேர் நன்மையும் கிட்டியது. அதாவது சென்னையில் 1968ம் ஆண்டு நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுக் காட்சிகளையும் பொருத்தமான இடத்தில் அமைத்திருந்தார் அடியார். எனவே எழுச்சிமிகு அக் காட்சிகளைக் கண்டு புத்துணர்வு பெற்ருேம்.

நாடகம் மூலம் இயக்கக் கருத்துக்களை வெற்றிகரமாக மக்களிடையே பரப்பலாம் என்பதை உணர்ந்து அதை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டவர்கள் தி. மு. கழகத்தினர்; எனவே தி. மு. கழகத்தினரின் நாடகம் சுவையும், கருத்துப்பொலிவும், எழுச்சியும் உள்ளதாக இருந்திடுவதில் வியப்பேதுமில்லை.

இரவு 9 மணியளவில் தொடங்கிய நாடகம், முடிவடையும்போது இரவு 2.00 மணியாகி விட்டிருந்தது. கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களில் ஒருவர் கூட அசையவில்லை— அப்படியே அமர்ந்திருந்தார்கள்.

நாடகம் முடிவடைந்ததும், மேடைக்கு அமிர் அண்ணனை அழைத்து வந்து மாலை சூடி, "ஈழத்து நாவலர், இலங்கைத்தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர், திரு. அமிர்தலிங்கம் இப்போது பேசுவார்" என்று அடியார் அறிவித்தபோது அங்கு குழுமியிருந்த மக்கள் எழுப்பிய கரகோஷம், வான் முட்டிய காட்சி கண்டேன்.

அமிர் அண்ணன் தமக்கேயுரிய காம்பீரியம் மிக்க குரலில் அங்கு பேசுகையில் தி. மு. கழகம் தமிழ் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை கையேற்கவேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் ஒரு மனதான விருப்பம் என்பதைத் தெரிவித்தபோது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்ருர்கள். 'நாவலர் அமிர்தலிங்கம் வாழ்க' என்று அவர்கள் முழக்கமிட்டனர்.

தனது நினைவாக ஒரு நூலை என்னிடம் அன்பளிப்பாகத் தந்தார் நண்பர் அடியார். அதில் ஏதாவது எழுதித்தரும்படி அவரிடம் கேட்டுக் கொண்டேன். "ஈழத்து எழுத்துவேந்தன் கோவை மகேசனுக்கு அடியாரின் அன்பளிப்பு" என்று எழுதிக் கையெழுத்திட்டுத் தந்தார் அவர்.

தாயின் குரல் கேட்ட கன்று ஓடிவருவதுபோல அமிர் அண்ணனின் குரல் கேட்டு மேடையை நோக்கி ஓடி வந்தனர் சில இளைஞர்கள். "நாங்கள் யாழ்ப் பாணத்தவர்கள். இங்கு படிக்கிறோம். உங்கள் குரல் கேட்டு, உங்களை ஒரு தடவை ஆசை தீரப்பார்த்துப்பேசிவிட்டுப்போகலாமென்று வந்தோம் என்று கூறினுர்கள் அவர்கள். ஆம், சொந்த நாட்டவன் ஒருவனை அயல் நாடொன்றில் காணும் போது ஏற்படும் மகிழ்வு இருக்கிறதே... அதற்கு ஈடில்லைத்தான்!

இது நடந்தது 1971 பெப்ரவரியில். இந்த ஆண்டு பெப்ரவரியில் தமிழ்நாடு சென்றிருந்தபோது, அடியாரின் மற்ருேர் நாடகம் ஒன்றைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. வங்கதேசப் போராட்ட நிகழ்ச்சிகளை பின்னி, வங்கதேசம் உருவாவதற்கு வேண்டிய காரணிகளை எடுத்து விளக்கி, 'மாநில சுயாட்சி' எனும் தி. மு. கழக கொள்கைக்கு உயிரூட்டும் வகையில் 'தங்க வங்கம்' என்னும் இந்நாடகத்தை அடியார் உருவாக்கியிருந்தார். விடுதலை உணர்வைத் தூண்டிவிடக்கூடியதாக அமைந்த இந்நாடகத்தில், வங்கத் தந்தை முஜீபுர் ரகுமானுக அடியாரே பாகமேற்று நடித்தார்.

சென்னை அண்ணு கலையரங்கத்தில் நடைபெற்ற இந்த நாடகத்துக்கு அடியாரின் விருப்பப்படி தந்தை செல்வாவே தலைமை தாங்கினுர். முஜீபுர் ரகுமானுக அடியார் உணர்ச்சியுடன் நடித்தபோது, தந்தை செல்வா அவர்கள் மெய்மறந்து மிக உன்னிப்பாக அதை இரசித்துக்கொண்டிருந்ததைக் கண்டேன்.

ஆம், பத்திரிகையாளர், எழுத்தாளர், நாடக ஆசிரியர், நாடகத் தயாரிப்பாளர், பேச்சாளர், இத்தனையுடன், நல்ல நடிகர் என்ற நிலையினையும் அடியார் அவர்கள் அடைந்துவிட்டார் என்பதற்கு 'தங்க வங்கம்' ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது.

தந்தை செல்வா அவர்கள் அடியாரின் உணர்ச்சி மயமான நடிப்பைப் பாராட்டிப் புகழ்ந்து பேசினுர். அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள் 'தங்க வங்கம்' நாடகம் விடுதலை விரும்பிகளுக்கு ஒரு கேடயமாக விளங்குகிறதென்றும் வங்கத்தைப் பின்பற்றி ஈழத்தமிழ் நாடும் விடுதலை பெறப்போவது நிச்சயம் என்றும் உரையாற்றினுர்.

இதைத் தொடர்ந்து சகோதரி மங்கையர்க்கரசியார், தமக்கேயுரிய இனிமையான குரலில் 'எங்கள் ஈழத் தமிழ்நாடு' என்னும் தேசியகீதத்தை உணர்ச்சியுடன்பாடியபோது, அந்தக் கீதம் காற்றில் மிதந்து சென்று வங்கக் கடற்கரையில் துயிலும் அண்ணனின் காதில் விழுந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை,

நான் அந்த நாடகத்தில் பேசுவதாக இருக்கவில்லை. ஆனுல் 'முஜீபுர் ரகுமானுக' காட்சியளித்த அடியார், 'மகேஸ் பேசுங்கள்' என்று உரிமையுடன் அன்புக் கட்டளையிடவே தட்டமுடியாது, சில வார்த்தைகள் கூறி வைத்தேன்.

'தங்கவங்கம்' உருவாகியது போல, இன்னும் சில ஆண்டுகளில் 'தங்க ஈழம்' உருவாகிவிடும். எனவே 'தங்க ஈழம்' எனும் நாடகத்தையும் [illegible] யாரே எழுதவேண்டும். அந்த நாடகத்தில் அவரே நடிக்கவும் வேண்டும். அதை நான் பார்க்கவேண்டும் — அதுவே என் ஆசை."

என்று கூறினேன். ஆம், தங்க வங்கம் உருவாகியது போல, தங்க ஈழமும் நிச்சயம் விரைவில் உருவாகத் தானே போகிறது?

—தொடரும்

## இஸ்லாமியர்கள் தனியொரு தேசிய....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் அடிப்படைக் காரணத்தை நாம் சிந்திக்க வேண்டும். எகிப்து மீது போர் தொடுத்த பிரிட்டனும், பிரான்சும் கத்தோலிக்க நாடுகள்தான், அதே நேரத்தில் இந்நாடுகளை முதன் முதலாக இரத்தத்தால் கை எழுத்திட்டு எதிர்த்தவர்களும் கத்தோலிக்கர்கள் தான் என்பதை நாம் சிந்திக்கும் போது, அவர்களின் மொழி உணர்ச்சி — தேசிய எழுச்சிகளெல்லாம் மேலோங்கி நின்றதைத் தான் நாம் கண்டோம்.

அன்றைய பாகிஸ்தானில் ஒரே மதத்தைச் சார்ந்த முஸ்லிம் மக்களுக்கிடையே எத்தனை பெரிய மொழிப் போராட்டங்களும் — நரபலிகளும் நடந்து முடிந்தன என்பதை நாம் மறந்துவிட முடியுமா? ஏன் இன்றும்கூட பங்களாதேஷ் பிரிந்த பின்பும் — சிந்து மாகாண மக்கள் தங்கள் சிந்து மொழி ஆட்சிமொழியாக்கப்பட வேண்டும் என்று பரவலான போராட்டம் நடத்துவதைப் போன்று — வடமேற்கு எல்லைப்புற மக்களும் தங்கள் புஷ்து மொழிக்குரிய சம உரிமை கோரி போராட்டத்தைத் தீவிரப் படுத்தியிருக்கிருர்கள். ஒரே மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தும்கூட தம் தாய்மொழிக்காக எவ்வளவு பெரிய போராட்டத்தை நடத்தியிருக்கிருர்கள் என்பதை இலங்கை முஸ்லிம்கள் சிந்திக்க வேண்டும். அராபிய மொழிக்கா. அவர்கள் உரிமைப் போராட்டம் நடத்துகின்ருர்கள் இல்லையே!

### பல மதங்களுக்கும் தமிழ் சமத்துவம் தந்தது.

அன்று காந்தி கண்ட இந்திய உப கண்டத்தில் கூட இதே மொழிப் போராட்டம் தீவிரமாகிக்கொண்டிருப்பதை நாம் பார்க்கின்ருேம். தென்னுட்டுத் தலைவர் திரு. ராஜாஜி வடநாட்டில் தனக்குத் தெரியாத இந்தியில் பேசமுடியவில்லை என்பதற்காக கூச்சலிட்டு அவரைப் பேசவிடாது தடுத்து விட்டார்கள். அதே போன்று வடநாட்டுத் தலைவர் தென்னுட்டில் (திரு. லோகியா) தமிழில் பேசவில்லை — மொழி தெரியாது என்பதற்காக எதிர்ப்புக் காட்டித் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. சஞ்சீவிரெட்டி காங்கிரஸ் கூட்டத்தில் இந்தியில் பேசவில்லை — பேசத் தெரியாது என்பதற்காக நேரு பெருமான் பார்த்திருக்க மேடையை விட்டு இறக்கிவிட்டனர். கல்கத்தாவை விட்டு அஸாமியர்கள் வெளியேற்றப்படுகின்ருர்கள் — அஸாமைவிட்டு வங்காளிகள் விரட்டப்படுகின்றனர் — இவைகளெல்லாம் எமக்கு எதை எடுத்துக்காட்டுகின்றன. ஒரு நாட்டின் நலனுக்காக வாழக்கூடிய மக்கள்தான் இப்படித் தமது தாய்மொழியின் சிறப்புக்காகப் போராடுகின்ருர்கள். இந்த மொழி உணர்ச்சி இலங்கை முஸ்லிம்களுக்கு எங்கே போய்விட்டது?

எம்மை வளர்த்த தமிழ் — எம் மேம்பாட்டைக் காத்த தமிழுக்கு அழிவென்ருல் — அங்கே எம் உயிரே துரும்பாக வேண்டுமல்லவா? தேம்பாவாணி மூலம் கிறிஸ்துவத்தை வளர்த்த தமிழ் மணிமேகலை மூலம் பௌத்தத்தை வளர்த்த தமிழ் — சீரு மூலம் இஸ்லாத்தையும் வளர்த்தது. பல மதங்களின் வளர்ச்சிக்குச் சமத்துவமாகப்பணியாற்றிய எமது தாய் மொழியாம் தமிழை நாம் என்றைக்குமே பேணிப் பாதுகாத்துத்தான் ஆக வேண்டும். அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய முஸ்லிம் பெருங்குடி மக்கள் தயங்கக்கூடாது எனச் சிரம் தாழ்த்தி வேண்டுகின்றேன்.

அழகு தமிழ் எழில் மிகு அணியாரமாம் — அதன் புகழ் சாற்றுவதே எம்பணியாம். பேசும் தமிழிலே ஒரு பொலிவும் பூரிப்பும், கற்ருேருக்கு உலகில் அது ஓர் சொர்க்கம். தமிழினத்தின் தனித் தன்மையை பாதுகாக்கவேண்டி பொற்பேழை — வீரத்தின் வித்து — தமிழ் தேசிய இனத்தின் மணம் பரப்பும் பூமலர்க் கொத்து — எனவே எம் தாய்மொழி தமிழ் அழிக்கப்பட்டால் தமிழ் தேசிய இனம் தானே [illegible] விடும் என்ற உணர்வும் — உணர்வையும் எமதுள்ளங்களைக் கிழித்தெறியட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது காட்சியளிக்கிறது

**சென்ரல்** திரையில்

ஜெமினி,
சரோஜாதேவி

—நடித்த—

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# குலவிளக்கு

வெகு விரைவில்

சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
எம். ஆர். ராதா
மனோரமா
வி. கே. ராமசாமி

—நடித்த—

# பட்டிக்காடா பட்டணமா?

வேண்டுகோளுக்கிணங்க
நீடிக்கப்பட்டது

கெப்பிட்டல் (கொழும்பு) விஜிதா (ஹற்றன்)



சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
பாலாஜி
நிர்மலா - சோ
மற்றும் பலர் நடித்த

ஜேயார் மூவிஸ்

# எங்க மாமா

(ஈஸ்மன் கலர்)

6வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) லிடோ (யாழ்நகர்) விஜயா (மட்டுநகர்)

சிவாஜிகணேசன்
சரோஜாதேவி
முத்துராமன்
சோ — மனோரமா
தேங்காய்சீனிவாசன்
ஜெய்குமாரி
வி. கோபாலகிருஷ்ணன்
நடித்த

இசை: கே. வி. மகாதேவன்
டைரக்ஷன்: வி. ஸ்ரீனிவாசன்



# "அருணோதயம்"

முதன்முதல் இந்திய ஜனாதிபதி பரிசு பெற்ற, முதன் முதல் இந்தியாவிலிருந்து ஹாலிவூட் ஆஸ்கார் பரிசுக்கு நியமிக்கப்பெற்ற நடிப்பிற்கே இலக்கணம் வகுத்த பத்மஸ்ரீ சிவாஜியின் திரைப்படவிழா

# செல்லமகால் திரையில்

| 25 - 28 | 29 - 31 | 1 - 3 |
|---|---|---|
| சிவாஜி<br>ஜெமினி<br>சாவித்திரி<br>ரங்கராவ்<br>நடித்த<br>**பந்தபாசம்** | சிவாஜி<br>சரோஜாதேவி<br>நடித்த<br>**குலமகள் ராதை** | சிவாஜி தேவிகா<br>மணிமாலா நாகேஷ்<br>நடித்த<br>**அன்பு கரங்கள்** |

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு [illegible] மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 1972ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org